விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 06 செவ்வாய்க்கிழமை (19.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 31

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மீண்டும் இந்தியாவுடன் பேச்சு



### மாவை சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் பின்னர் இம்மாத இறுதியில் மீண்டும் இந்தியாவுக்கு விஜயம் செய்து உயர் மட்ட தலைவர்களை சந்திக்க எதிர்பார்க்கின்றோம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முக்கியமாக அரசியல் தீர்வு விடயம் குறித்து இந்திய உயர்மட்டத்துடன் பேச்சு நடத்தவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மாவை சேனாதிராசா இது தொடர்பில் மேலும் கூறுகையில், கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு விஜயம் (16ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கு நோயினால் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயினால் குடும்பப் பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கோயில் வீதியைச் சேர்ந்த மேரி ஜலான் றொக்ஸி (வயது 47) என யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

டெங்கு நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த பிரஸ்தாப பெண் நேற்று முன்தினம் இரவு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-30)

# ஜனாதிபதித் தேர்தலில் அனைவரும் சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்க வேண்டும் என தாம் எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புடெனிஸ் தெரிவித்துள்ளார். தேர்தல் தொடர்பான வன்முறைகளில் இதுவரை மூவர் கொல்லப்பட்டுள்ள நிலையில் அமெரிக்கத் தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மிதிவெடியில் சிக்கி பொதுமகன் நேற்று படுகாயம்

(வன்னி)

வன்னிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மிதிவெடி விபத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று வன்னி பகுதியில் இடம்பெற்ற மிதிவெடி விபத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் காலில் காயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் காவல்துறை பேச்சாளர் ஐ.எம்.கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

வன்னி பகுதியில் (15ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் வாக்குறுதிகள் அமெரிக்காவை கவர்ந்துள்ளன!

### ஏ.எஃப்.பியின் ஆய்வில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஊடக சுதந்திரம், சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்தல் போன்ற பொன்சேகாவின் உறுதி மொழிகள் அமெரிக்காவை கவர்ந்துள்ளன. எல்லா வேட்பாளர்களும் பல விடயங்களில் உறுதி மொழிகளை வழங்கி வருகின்றனர். ஆனால் அவர்கள் அதனை பின்னர் நிறைவேற்றுவதில்லை.

எனினும் ஜெனரல் பொன்சேகா தெரிவித்து வரும் கருத்துக்கள் ஆக்கப் பூர்வமானவை என அமெரிக்கா தெரிவித்துள்ளதாக ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனம் தனது ஆய்வில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஏ.எஃப்.பி வெளியிட்ட செய்தி ஆய்வின் தமிழ் வடிவம் வருமாறு,

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் அமெரிக்காவுக்கு புதிய நம்பிக்கைகளை தோற்றுவித்துள்ளது. வன்னியில் நடைபெற்ற போர் அனைத்துலக சமூகத்திற்கும் இலங்கைக்கும் கசப்பான (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு உப வேந்தர்கள் ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கப் போவதாக அனைத்து பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் தீர்மானித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்களின் ஆணைக் குழுவின் தலைவர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். எந்தவிதமான நிபந்தனைகளும் (16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறைகள் திடீர் அதிகரிப்பு மேலும் இரு ஆதரவாளர்கள் கொலை

### விசாரணை செய்ய புலனாய்வுக்குழு விரைவு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் ஒரு வாரமே எஞ்சியுள்ள நிலையில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்து செல்கின்றது. ஜனாதிபதி தேர்தலில் தமது கட்சிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்ற ஆதரவாளர்கள் கொல்லப்படுகின்ற நிலைமையும் அதிகரித்துள்ளது.

நேற்று இரவு சரத் பொன்சேகாவின் ஆதரவாளர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதுடன் ஜனாதிபதி தேர்தல் வன்முறையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்வடைந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு வாரியபொல பகுதியில் வைத்து எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத்பொன்சேகாவின் ஆதரவாளர் ஒருவர் சரத் பொன்சேகாவின் விளம்பர சுவர் ஒட்டியை (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைகளை இரத்துச் செய்ய ஐரோ. ஒன்றியம் முடிவு!

(கொழும்பு)


ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ். சலுகைகளை இரத்துச் செய்வதற்கான விசாரணையைக் கடந்த ஜனவரி 14 ஆம் திகதி நடத்தியது. இறுதியில் இலங்கை அரசாங்கம் மனித உரிமை மீறல்களை நிறுத்தி நிலைமையைச் சீரமைக்காத பட்சத்தில் ஆறு மாதத்துக்குள் ஜி.எஸ்.பி.பிளஸ். வரிச்சலுகை இரத்துச் செய்யப்படும் என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

இது குறித்து தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி.சலுகைகளை இரத்துச் செய்வதற்கான விசாரணையைக் கடந்த ஜனவரி 14ஆம் திகதி நடத்தியது. இலங்கை மீதான மனிதவுரிமை மீறல் குற்றச் சாட்டுகள் இவ்விசாரணையின்போது ஆராயப்பட்டது.

இலங்கைக்கான தூதுவர், முன்னாள் போராளிகள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுப் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் குழந்தைப் போராளிகள் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





இலங்கை மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறைமையின் 31ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய ஆய்வரங்கில் புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் டி.வசந்த, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதியாணைக் குழுத் தலைவர் ஏ.கேவகே மற்றும் மத்திய வங்கி தொழில் துணை ஆளுநர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், யாழ்ப்பாணப் பிரபல பொருளியல் ஆசிரியர் வி.கருணாகரன் கருத்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# யாழில் டெங்கு நோயை கட்டுப்படுத்த பல்வேறு மட்டங்களில் நடவடிக்கை

## யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

**வலம்புரியில் 17/01/2010 அன்று டெங்கு நோய் தொடர்பாக எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பு இங்கு பிரசுரமாகின்றது.**

01.இலங்கையில் கடந்த காலங்களில் மலேரியா நோயின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நோயை பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்த DDT, மலத்தியோன் போன்ற நுளம்பு கொல்லிகள் வீடு வீடாக விசிறப்பட்டன. இதனால் மலேரியா நோய் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் மலேரியா நோய் பூரணமான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே மலத்தியோன் போன்ற கிருமிநாசினிகள் வீடுவீடாக விசிறப்படுவதில்லை. இதே நடைமுறைதான் இலங்கை முழுவதும் பின்பற்றப்படுகின்றது.

மலேரியா நோய் எங்காவது இனங் காணப்பட்டால் அந்த பிரதேசத்தில் மட்டும் இவை விசிறப்படுகின்றன.

02.டெங்குநோயை பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்த வீடுவீடாக சென்று நுளம்பு கொல்லி மருந்துகளை விசிறுவதில்லை. இது உலகில் எங்கும் பின்பற்றப்படுவதில்லை.

டெங்குநோயை பரப்பும் நுளம்பு உற்பத்தியாகும் சிறிய தூயநீர் கொண்ட கொள்கலன்களை அழிப்பதே டெங்கு நோயின் முக்கியமான வினைத்திறன்மிக்க தடுப்பு நடவடிக்கை ஆகும்.

இதனை ஒவ்வொரு நிறுவனமும் ஒவ்வொரு குடியிருப்பாளரும் உணர்ந்து தத்தமது வளவிலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும், பொது அமைப்புகளும் பொது இடங்களில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமே டெங்கு நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும்.

03.எனினும் டெங்குநோயின் பரம்பல் அதிகமாகவுள்ள இடங்களில் (இறப்புக்கள் ஏற்பட்ட இடங்கள், அதிக நோயாளர்கள் இனங் காணப்பட்ட பகுதிகள்) புகையூட்டல் மூலம் உடனடியாக நுளம்புகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரங்களில் யாழ்.மாநகரசபை பிரதேசம், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், நல்லூர் பிரதேச செயலக பிரிவுகளில் புகையூட்டல் நடவடிக்கைகள் நடைபெற்றன. தற்போதும் நடைபெற்று வருகின்றன.

இருப்பினும் புகையூட்டல் என்பது ஒரு தற்காலிக நடவடிக்கையே. புகையூட்டலின் போது காற்றிலுள்ள நிறையுடலி நுளம்புகள் மட்டுமே இறக்கும்.

அப்பிரதேசத்தில் நுளம்பு உற்பத்தியாகும் ஓர் இடமிருந்தால் அடுத்த நாளே ஏராளமான நுளம்புகள் அப்பிரதேசத்தை வந்து சேரும்.

எனவே சுத்திகரிப்பு பணி மூலமே டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்தலாம்.

04.கடந்த 2மாத காலமாக டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக யாழ்.மாவட்டத்தில் பல்வேறு மட்டங்களிலும் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றை மாவட்ட, பிரதேச, கிராமிய மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்கள் ஒருங்கிணைத்து வருகின்றன.

எனவே டெங்குநோயை கட்டுப்படுத்துவதற்கு அனைவரது ஒத்துழைப்பும், பங்களிப்பும் இருந்தால் மட்டுமே நாம் இதனை கட்டுப்படுத்த முடியும். (ச)

# புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களை

## 500பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து விரும்பும் துறையில் பயிற்சி வழங்க நடவடிக்கை

புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் அனைவரையும் அவர்கள் முன்னெடுக்க விரும்பும் துறைகளின் அடிப்படையில் 500 பேர்களாக பிரித்து அவர்கள் சொந்த இடங்களுக்கு அருகில் புனர்வாழ்வு வழங்க தீர்மானித்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

இவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் 4 இடங்களும், வவுனியாவில் 5இடங்களும், வெலிகந்தையில் 3 இடங்களும், திருகோணமலையில் 3இடங்களும், மட்டக்களப்பில் 4இடங்களுமாக 20 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றில் மெனிக்பாமில் உள்ள நலன்புரி முகாம்களில் 4புனர்வாழ்வு நிலையங்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார். வவுனியா பம்பைமடுவில் ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அனைவரும் 500பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடித்துறை, விவசாயத்துறை, கணனி சார்துறை, மிருக வளர்ப்பு, தையல் துறை என பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டு இவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்களில் பலர் முன்னர் மீன்பிடித் துறை, விவசாயத்துறை போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்களாவர்.

புனர்வாழ்வு செயற்பாடு முடிந்தபின் இவர்களுக்கு தமது சொந்த ஊர்களுக்குச் சென்று தாம் பயிற்சி பெற்ற துறையில் ஈடுபட சந்தர்ப்பம் அளிக்கப்பட உள்ளது.

தற்பொழுது 10ஆயிரத்து 832பேர் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர். இவர்களில் 2ஆயிரத்து 500க்கும் அதிகமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாவர். 2 ஆயிரத்து 500க்கும் அதிகமானவர்கள் கிளிநொச்சியையும், 2ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் முல்லைத்தீவையும் சுமார் ஆயிரம் பேர் வவுனியாவையும் சுமார் 500 பேர் மட்டக்களப்பையும், 500க்கும் அதிகமானவர்கள் மன்னாரையும், சுமார் 500பேர் திருகோணமலையையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# சனச அபிவிருத்தி வங்கி யாழில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

சனச அபிவிருத்தி வங்கியின் 54வது கிளை யாழ்ப்பாணத்தில் இன்று காலை 10.00மணிக்கு இல. 212, ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சன அபிவிருத்தி வங்கியின் கௌரவத் தலைவர் கலாநிதி பீ.ஏ.கிரிவந்தெனிய, இலங்கை மத்திய வங்கியின் தலைவர் அஜித் நிவாட் கப்ரல் ஆகியோர் தலைமையில் வங்கி திறந்து வைக்கப்படவுள்ளது. (ச-5)

# 30ஆயிரம் படையினர் இறுதி யுத்தத்தில் உயிரிழப்பு

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

இறுதிப்போரில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளதாக சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். மாத்தளையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய போது அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மகிந்த ராஜபக்ஷ அரசு போர் வெற்றியினை விற்று ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

நாட்டில் இன மொழி பேதங்களை ஒழித்து மக்கள் அனைவருக்கும் சம உரிமைகளை பெற்றுக்கொடுத்து மக்களது தனித்தன்மையினை பாதுகாக்க தொடர்ந்தும் உழைப்பதாக சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை அரசு தமது சொந்த இலாபத்திற்காகவும் ஆட்சியின் பதவிகளை தக்க வைப்பதற்காகவும் தென்பகுதி சிங்கள மக்களையும், வடபகுதி தமிழ் மக்களையும் ஒருவருக்கொருவர் எதிரிகளாக உருவாக்கும் சதிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

வன்னியின் இறுதிக்கட்ட போரில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் உயிரிழந்துள்ளதாகவும் முப்பத்தாறாயிரத்திற்கு மேற்பட்ட படைவீரர்கள் அங்கவீனர்கள் ஆக்கப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் நாவலர் காட்டிய சைவ வாழ்வியல் தொடர் கருத்தரங்கில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு 'வினையின் விளைவு' என்ற பொருளில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் உரையாற்றவுள்ளார். (ச)

# கால்கோள் விழா

(யாழப்பாணம)

திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா நாளை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.குகதாசன் பிரதம விருந்தினராகவும், ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.இராமநாதன், ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் கே.சிவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ந)

# கண்ணாடிக்குள் தவறிவிழுந்த இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

லொறியில் இருந்த கண்ணாடி அடுக்கப்பட்ட பெட்டிக்குள் தவறி விழுந்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே.கே.எஸ் வீதி, யாழ்.நகரில் நேற்றுக் காலை 10.30மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மானிப்பாயைச் சேர்ந்த கந்தசாமி சாந்தகுமார் (வயது 19) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

கொழும்பிலிருந்து லொறி மூலம் கண்ணாடிகள் பெட்டிகளில் அடுக்கப்பட்டு எடுத்து வரப்பட்டன. அவற்றை இறக்கும் பணிகள் நேற்று இடம்பெற்றுக் கொண்டிருந்த போதே அப்பெட்டிக்குள் பிரஸ்தாப இளைஞன் தவறி வீழ்ந்துள்ளார்.

இதனால் கை, வயிறு உட்பட உடல் பகுதிகள் பலவற்றில் கண்ணாடித்துண்டுகள் குத்தியதில் அவர் படுகாயமடைந்தார்.

பலத்த காய ங்களுடன் அதிகளவான இரத்தம் வெளி யேறிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப இளைஞன் தீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (ச-30)


வாராந்த நிகழ்வில் பங்கு பற்றியோருக்கான அறிவுறுத்தல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் வாரம் தோறும் இடம்பெறும் வெள்ளி நிகழ்வில் 2002-2008 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பங்கு பற்றியோரை கௌரவிக்கும் நிகழ்வு 31.01.2010 ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளதால் நிகழ்வில் பங்கு பற்றிய அனைவரையும் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சந்நிதியான் ஆச்சிரமம்

(C-4272)

# இன்று ஒரு தகவல்

## உயர்ந்தவர் யார்?

ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்.

அவர்கள் இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்வார்கள். பின் ஒன்று சேர்ந்து விடுவார்கள்.

ஒருத்தன் ஒரு பெரியவரிடம் கார்ச்சாரதியாக இருந்தான்.

இன்னொருத்தன் ஒரு குப்பை ஏற்றும் லொறிச்சாரதி. அவர்களிருவருக்கும் இடையில் ஒரு வாக்குவாதம்.

"நம்மிருவரில் யார் உயர்ந்தவர்?"

காரோட்டுபவன் சொன்னான்;

"என்ன இருந்தாலும் நீ குப்பை அள்ளிக் கொட்டுபவன் நான் அப்படி இல்லை. என் காரில் ஏறுபவர்கள் எல்லோரும் பெரிய மனிதர்கள்– பணக்காரர்கள்– அறிவாளிகள். உனது லொறியில் இப்படி யாராவது ஏறிப் பயணம் செய்ததுண்டா?" என்றான்.

அதற்கு லொறி ஓட்டுபவன் சொன்னான்;

"ஊர் சுத்தமாக இருப்பதற்கு நான் தான் காரணம். நீ ஒருநாள் வேலைக்குப் போகாவிட்டால் ஒன்றும் ஆகிவிடாது. ஆனால் நான் ஒருநாள் வேலைக்குப் போகாவிட்டால் ஊரே நாறிவிடும்" என்றான்.

அவர்களுடன் விவாதம் ஒரு முடிவுக்கு வரவில்லை.

இந்தச் சமயம் பார்த்து அந்தப்பக்கமாக ஒரு பெரியவர் வந்தார்.

"என்னப்பா என்ன விவகாரம்?" என்றார்.

"எங்களிருவரில் யார் உயர்ந்தவர் என்று தெரிய வேண்டும்?" என்றார்கள்.

அதன்பின் அவர்களைப் பற்றிய விவரத்தையும் சொன்னார்கள்.

பெரியவர் எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டார்.

அதன்பின் சொன்னார்.

"தம்பிகளா! இப்படி உட்காருங்க. உங்கள் சந்தேகத்தை நான் தீர்த்து வைக்கிறேன். அதற்கு முன் ஒரு கதை சொல்கிறேன்... அதைக் கேளுங்கள்" என்று சொல்ல ஆரம்பித்தார்.

இவர்கள் இரண்டு பேரும் வாக்குவாதத்தை விட்டுவிட்டு கதை கேட்கும் ஆர்வத்தில் அவருக்கு முன் உட்கார்ந்தார்கள்.

பெரியவர் கதை சொல்ல ஆரம்பித்தார்.

ஒரு ஊரில் ஒரு வணிகர் இருந்தார்.

அவரிடம் இரண்டு கோவேறு கழுதைகள் இருந்தன.

அந்தக் கழுதைகள் முதுகில் பொருட்களை ஏற்றுவார்.

சந்தைக்கு கொண்டு போய் வியாபாரம் செய்வார்.

ஒரு கழுதையின் முதுகில் தானியங்களையும் இன்னொரு கழுதையின் முதுகில் நவரத்தினங்களையும் ஏற்றுவார்.

இப்படி ஏற்றுக் கொண்டு ஒரு நாள் சந்தைக்குப் புறப்பட்டார். அந்தச் சமயத்தில் அந்த இரண்டு கழுதைகளுக்குமிடையில தகராறு ஏற்பட்டது.

நவரத்தின மூட்டை வைத்திருக்கும் கழுதை தன்னைப்பற்றி உயர்வாக நினைக்க ஆரம்பித்தது.

"என்ன இருந்தாலும் நான் நவரத்தின மூட்டையை முதுகில் வைத்திருக்கிறேன். நீ வெறும் அரிசி மூட்டையும் உளுந்து மூட்டையையும் தானே முதுகில் வைத்திருக்கிறாய். அதனால் நான் தான் முன்னால் போவேன் நீ எனக்கு பின்னால் தான் நடந்து வரவேண்டும். அதுதான் எனக்குக் கௌரவம்" என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தது.

கோவேறு கழுதையும் சரியென்று இதன் பின்னாலேயே நடந்து சென்றது.

ஒரு காட்டு வழியாக அவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் திடீரென்று இரண்டு வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் அவர்களை வழிமறித்தார்கள்.

நவரத்தினங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட வேண்டும் என்பது தான் அவர்களின் திட்டம்.

அதனால் முதலில் அந்த ஆளை ஒரு மரத்தில் சேர்த்துக் கட்டிப் போட்டார்கள். அதன்பின் அந்த கோவேறு கழுதைகளைத் துரத்தத் தொடங்கினார்கள்.

ஒருத்தன் ஓடிப்போய் ஒரு கழுதையைப் பிடித்தான். அதன் முதுகில் இருந்த மூட்டையைக் பிரித்தான். அரிசியும் உளுந்தும் இருந்தது.

அப்படியானால் மற்றக் கழுதையின் முதுகில் தான் நவரத்தினம் இருக்க வேண்டும்.

அதைத் துரத்த தொடங்கினார்கள். அதுவும் எவ்வளவோ ஓடிப்பார்த்தது. முடியவில்லை கடைசியில் மாட்டிக் கொண்டது.

மரத்தில் கட்டினார்கள்.

இவ்வளவு ஓட்டம் ஓடுகிறாயா என்று அதை அடித்தார்கள். அடியைத் தாங்க முடியாமல் அது கத்த ஆரம்பித்தது.

திருடர்கள் நவரத்தின மூட்டையைத் தூக்கிக் கொண்டு ஓடிப் போய்விட்டார்கள்.

இது கத்துவதைப் பார்த்துவிட்டு மற்றக் கழுதை நெருங்கி வந்தது "ஐயோ பாவம்" என்றது.

அடிவாங்கிய கோவேறு கழுதை மற்றக் கழுதையைப் பரிதாபமாகப் பார்த்ததாம். பின்னர் சொல்லியதாம்.

"நான் நவரத்தினத்தை முதுகில் வைத்திருக்கிறேன் என்ற கர்வத்தில் இருந்தேன். அதற்கு நல்ல தண்டனை கிடைத்து விட்டது. அதை இப்பொழுது நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்." என்றதாம்.

பெரியவர் இந்தக் கதையைச் சொல்லி முடித்தார். அதன் பின் சொன்னார்.

"அந்தக் கோவேறு கழுதை கர்வப் பட்டுதே..." அதே போலத்தான் இன்றைக்கு உலகத்தில் பல மனிதர்களும் கர்வப்படுகிறார்கள்.

சரி... இப்போது உங்கள் பிரச்சினைக்கு வருவோம். நீ கார் ஓட்டுகிறாய்... நீ லொறி ஓட்டுகிறாய்...

உங்களில் யார் உயர்ந்தவர் என்று தெரிய வேண்டும் அவ்வளவுதானே..." என்றார். அந்த இரண்டு நண்பர்களும் எழுந்தார்கள்.

பெரியவரைப் பார்த்துக் கும்பிட்டார்கள்.

" எங்களுக்குப் பதில் கிடைத்து விட்டது. நாங்கள் வருகிறோம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்களாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வாக்களிப்பு நிலையங்களுக்கு இராணுவத்தின் மேலதிக பாதுகாப்பு

## ஜே.வி.பி. கோரிக்கை

தேர்தல் தினமன்று இராணுவத்தினரை பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்த வேண்டுமென ஜே.வி.பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய வாக்களிப்பு நிலையங்களுக்கு இராணுவத்தினரின் மேலதிக பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸா நாயக்க தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளார்.

தற்போது ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு நிலவும் பிரதேச மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்வதனை தடுத்து முனைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அத்தோடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பிரதேசங்களில் கூடுதலான வாக்காளர்களை வாக்களிப்பில் ஈடுபடுத்தவும் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு நிலவும் வாக்களிப்பு நிலையங்களில் வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம் வாக்காளர்களின் கவனத்தை திசை திருப்ப முயற்சி மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

தேர்தல் ஆணையாளருடன் நடைபெறவுள்ள சந்திப்பின் போது இந்த விடயம் தொடர்பில் நேரடியாக கோரிக்கை விடுக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# நாட்டை விற்று வாழும் மனோநிலை எமக்கு இல்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைத் தாரை வார்ப்பதற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட முதலாவது உடன்படிக்கையை நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச் செய்ததைப் போன்றே தற்போதுள்ள உடன்படிக்கையையும் தோற்கடிக்க வேண்டியுள்ளது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரசார கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எதிர்வரும் 26 ஆம் திகதி நாட்டின் திருட்டு உடன் படிக்கைகளை முடிவுக்கு கொண்டு வந்து குண்டர்களின் அராஜயகங்களையும் முடிபுக்கு கொண்டுவரவுள்ளதாக குறிப்பிட்டார்.

மேலும் இவற்றை ஒழிக்க அனைவரும் திட சங்கற்பம் பூண வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர் தாம் ஒரு விவசாயியின் மகன் எனவும் தமக்கு விளைநிலமும், சதுப்பு நிலமும் ஒன்றாகும் எனக் கூறினார்.

மேலும் நாட்டை விற்று வாழும் மனநிலை தமது அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அரச சொத்துக்களை விற்றோமா எனவும் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி நாட்டின் பயங்கரவாதிகளைப் பற்றி கதைப்பதற்கு அச்சமடைந்த யுகத்தை முடிபிற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார்.

மீண்டும் ஐக்கியப்படுத்திய நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பதாகவும் முதலாவது உடன்படிக்கையை நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு வந்து இரத்துச் செய்துள்ள விடுதலைப்புலிகளை தடை செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (2-3)

# தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி வழங்கும் திட்டம்

நல்லூர் விதாதவள நிலையத்தினால் தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சிகள் 2010 ஆண்டிலும் நடத்தப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியின் போது அரிசிசார் உற்பத்திப் பொருட்கள் தயாரிப்பு, இலத்திரனியல் சாதனங்கள் பழுதுபார்த்த, அன்ரனா வடிவமைப்பு, சிறந்த பொதியிடல் முறைகள், பற்றிக் வடிவமைப்பும் அச்சுப்பதித்தலும், மரக்கறி, பழவகைகள் உலர்த்தல், மாற்று வலு சக்தி அறிமுகப்படுத்தல், மூலிகைத்தோட்டம் அமைத்தல், கணனி வன்பொருள் பயிற்சி, வாழையிலை பதப்படுத்தல், வடிவமைத்தல், வியாபாரத் திட்டமிடல் பயிற்சி, கிறிஸ்ரல் சிலைகள் வடிவமைத்தல் என்பன வழங்கப்படவுள்ளது.

இதில் பயிற்சி பெறவிரும்பும் விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அந்த பிரிவில் உள்ள கிராம உத்தியோகத்தர் அல்லது சமுர்த்தி உத்தியோகத்தர்அல்லது நல்லூர் விதாதவள நிலையம் போன்றவற்றின் ஊடாக விண்ணப்பிக்க முடியுமெனவும் பிரசேத செயலர் கேட்டுக் கொள்கின்றார். (30-2)

# இராசி பலன்

*19-01-2010*
*(தை 06 செவ்வாய்க்கிழமை)*
*சதுர்த்தி முன்னிரவு 9.01 மணிவரை*
*சதயம் பிற்பகல் 2.23மணிவரை*
*இராகுகாலம் 3.35-5.05 மணிவரை*
*சுபநேரம் 11.05 - 12.35 மணிவரை*
*சதுர்த்தி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | தொழில் முன்னேற்றம், தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், தனவரவு. |
| இடபம் | சுப நிகழ்வு, இனிய தகவல், நண்பர்கள் உதவி செய்தல், ஆரோக்கிய நிலை. |
| மிதுனம் | ஆன்றோர் சந்திப்பு, தேவையற்ற பயம், அஜீரணக் கோளாறு, பயணம் |
| கடகம் | போசன சுகம், அச்சமான நிலை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், தனவிரயம். |
| சிங்கம் | அபூர்வ சந்திப்பு, பிரயாண நன்மை, எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம். |
| கன்னி | தொழில் நன்மை, சுவாரஸ்யம், முயற்சி கை கூடும், பண வருவாய். |
| துலாம் | கௌரவக்குறைவு, புத்திரரால் கவலை, தொழில் சிந்தை, காரிய இடையூறு. |
| விருச்சிகம் | பயந்த சுபாவம், செய்தொழில் விருத்தி, கல்வியில் ஆர்வம், உடல்நலக்குறைவு. |
| தனுசு | இனிய அனுபவம், அந்நியர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், பணவசதி. |
| மகரம் | மனக்கலை, பொருள்விரயம், உஷ்ணநிலை, முயற்சி தாமதம். |
| கும்பம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நண்பர்கள் உதவி, அதிக பிரயாசை. |
| மீனம் | பிதா சிந்தை, உணர்ச்சி வசப்படல், எதிர்பாராத நன்மை, திடீர் பயணம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 150 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 220 | 200 |
| தக்காளி | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 80 | 100 | 40 |
| கரட் | 140 | 150 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 90 | 100 | 60 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 240 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 140 | 160 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 120 | 140 | -- |
| கறிமிளகாய் | 280 | 300 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 130 | 120 |
| கத்தரி தம்புள்ள | 120 | 130 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 |
| தேசிக்காய் | 90 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 30 |



வலிகாமம் கிழக்கு-கோப்பாய் பிரதேச செயலக வளவில் விதாதா வள நிலையத்திற்கு அடிக்கல் நாட்டும் விழாவில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸினால் வரவேற்கப்படுவதையும், அமைச்சர் அடிக்கல் நாட்டுவதையும், கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவின் விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர் ப.பகீரதன் நன்றியுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் இதுவரை 20 ஆயிரம் ரூபா பெறாத அனைவருக்குமான கொடுப்பனவு நாளை மறுதினம் வியாழக் கிழமை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவைப் பெறாத அனைவரும் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (2)

## எரிபந்த நோய்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் எரிபந்த நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் க.விஜயகுமார் தெரிவித்தார்.

தற்போது மட்டுவில் வடக்கு, தெற்கு, நுணாவில், மிருசுவில் வடக்கு, தெற்கு, சரசாலை வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் எனினும் பி.ஜி 406 , ஏ.ரி 402 , எச் 04 ஆகிய இனங்கள் விதைக்கப்பட்ட நெல் வயல்களில் இந் நோய்த் தாக்கம் இனம் காணப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (2-29)

## பாதை அகலமாக்கப்பட்டது

(சாவகச்சேரி)

வரணி கரம்பைக்குறிச்சி மேற்கில் சமுர்த்தி அதிகாரசபையினரின் பங்களிப்புடன் தொல்லையன்மாவடி - குருக்கள் குடியிருப்புப் பாதை புனரமைக்கப்பட்டுள்ளது.

15கிலோமீற்றர் தூரம் கொண்ட இப் பாதை அமைப்பதற்காக இருமருங்கிலுள்ள காணிச் சொந்தக்காரர்கள் காணியை விட்டுக் கொடுத்துள்ளனர். அதனால் பாதை அகலமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (29)

## வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ்

# யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 18 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் செயற்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட 18 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின் நிதி மூலம் சின்னக் கிணற்றடி வீதி, மூத்த விநாயகர் வீதி 1ஆம் ஒழுங்கையும் உப ஒழுங்கையும் , பிராமணக் கட்டுக்குள வீதி, வண்ணான்குளம் வீதி, பிறவுண் வீதி 5 ஆம் ஒழுங்கை, சப்பல் வீதி, அடப்பன் வீதி, இராஜசிங்கம் வீதி, மண்பிட்டி குடியிருப்பு திட்ட வீதி ஆகிய 9 வீதிகள் யூரோவில், கே.எம்.பி. ஆகிய நிறுவனங்களிடம் ஒப்பந்த அடிப்படையில் யாழ்.மாநகர சபையினால் கையளிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் புவனேஸ்வரி அம்பாள் வீதி, துரையப்பா வீதி, சி.பொன்னம்பலம் வீதியையும் இணைக்கும் வீதி, கலைப்புலவர் வீதி, நாவலர் பாடசாலை ஒழுங்கை, பொன்னம்பலம் வீதி, ஓட்டுமடம் வீதி, 6 ஆம் குறுக்குத் தெரு, யாழ்.வீதி ஆகிய 9 வீதிகளும் பால்குளம் ஒழுங்கை, பண்ணை மார்பு சிகிச்சை கிளினிக் வீதி, மங்கையற்கரசி வித்தியாலயம் வீதி, கந்தபுராணம் வீதி ஆகிய 4 வீதிகளும் மக்களின் கோரிக்கைக்கு இணங்க புனரமைக்கப்படவுள்ளன.

இவ்வீதி புனரமைப்பிற்கான கற்கள் தென்னிலங்கையில் இருந்து கொண்டு வந்தபின் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார். (6-7)

## 2010 ஆம் ஆண்டு

# கணித அபிவிருத்தி ஆண்டாக யாழ்.கல்வி வலயத்தால் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

கல்விசார் அபிவிருத்தியை முதன்மைப் படுத்தும் நிலையில் 2010 ஆம் ஆண்டை கணித அபிவிருத்தி ஆண்டாக யாழ்.கல்வி வலயம் பிரகடனப்படுத்தியுள்ளது.

ஆரம்பப் பிரிவில் இருந்தே கணித விருத்தி எண்ணக் கருத்துடையவர்களாக மாற்றுதல், மீட்திறன் மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்குதல் என்ற நோக்குடன் இவ்வாண்டை கணித அபிவிருத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது.

இதற்கமைய யாழ்.வலயப் பாடசாலைகளில் கணிதமுகாம், கணித வினாவிடைப் போட்டிகள், கணிதபாடம் தொடர்பான கண்காட்சி,கணிதபாடம் தொடர்பான சஞ்சிகைகள் வெளியிடல், கணிதம் சார்ந்த சுவர் ஒட்டிகள், வகுப்பறைகளில் கணிதபாடம் சார்பான விடயங்களை காட்சிப்படுத்துதல், கணித தினம் நடாத்தப்படல், அயற் பாடசாலை ஆசிரியர்களை இணைத்து கணித பாட தர வட்டங்களை மேற்கொள்ளுதல், கணித கணித்தல் திறனை மேம்படுத்துவதற்கான திட்டம் போன்ற செயற்பாடுகள் யாழ்.வலய பாடசாலைகள் தோறும் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டை எழுத்தறிவு அபிவிருத்தி ஆண்டாக யாழ். கல்வி வலயம் பிரகடனப்படுத்தி சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (6-7)

# கிராமிய மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டுக் குழு அமைத்தல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கிராமிய மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் நேற்றுக் காலை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் நல்லூரிலுள்ள திவ்விய ஜீவன கழக மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணிக்கு கந்தர்மடம் ஜனசக்தி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு நாச்சிமார் கோயிலடி கல்யாண மண்டபத்திலும் முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயில் கல்யாண மண்டபத்திலும் பிற்பகல் 2.30 மணிக்கு கோண்டாவில் ஜே/119 கிராம அலுவலர் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

டெங்கு நோய் கட்டுப்பாட்டு தொடர்பான ஒருங்கிணைப்புக்கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற போது இக் குழுக்கள் நியமிப்பதன் மூலம் டெங்கு பரம்பலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது தொடர்பாக ஆராயப்பட்டன.

இக்கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டு குழுவில் தலைவராக கிராமசேவை உத்தியோகத் தரும் செயலாளராக பொது சுகாதார பரிசோதகரும் உறுப்பினர்களாக சமுர்த்தி உத்தியோகத்தர், குடும்ப நல உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், மாதர் அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகள், சனசமூக நிலைய பிரதிநிதிகள் அங்கம் வகிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-30)




## உளவியல் டிப்ளோமா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இந்திய கல்வி நிறுவனத்தின் அங்கீகாரத்துடன் துளிர்கள் உள சமூக மேம்பாட்டு நிறுவனத்தால் தொழில் வாண்மைத்துவ உளவியல் டிப்ளோமா கற்கை நெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான விரிவுரைகள் சனி, ஞாயிறு கிழமைகளில்7 ஆவது பிரிவாகவும் திங்கள், புதன்கிழமைகளில் 8 ஆவது பிரிவாகவும் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு துளிர்கள் நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (6)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சகல திணைக்களங்களின் தலைவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (6-19)

## மீளாய்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கான ஒரு நாள் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இன்று காலை 8. 30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் வாழ்வாதார அபிவிருத்தி பணிப்பாளர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் சகல பிரதேச செயலகங்களிலுமுள்ள தலைமை முகாமையாளர்கள், மகா சங்க முகாமையாளர்கள், வலய முகாமையாளர்கள், கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-30)

## கழிவுகளை அகற்ற வாடகை வாகனங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரால் டெங்கு நோய் பரம்பல் குறித்த ஓர் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை ஆளுநர் வதிவிடத்தில் நடைபெற்றது.

இதன் போது யாழ் மாநகரத்தில் காணப்படும் மேலதிக கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கென 10 டிரக்டர்களை வாடகைக்கு அமர்த்துவதற்கு அனுமதியளித்துள்ளதாகவும் இவற் றின் மூலம் பணிகளினை துரிதமாக மேற்கொள்ளலாம் என யாழ் மாநகராட்சி பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார். (2-30)

## தற்காலிக வாகன தரிப்பிடம்

(அல்வாய்)

பருத்தித்துறை சிற்றூர்திச் சங்கத்தினர் இதுவரை காலமும் தமது சிற்றூர்திகளை பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு அருகாமையில் நிறுத்தி வைத்திருந்தனர்.

இதேவேளை நேற்று முதல் பருத்தித்துறை புதியசந்தையின் தெற்குப் புறமாக அவர்கள் தமது வாகனங்களை நிறுத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை நகரசபையினால் இதற்கான அனுமதி இதுவரை வழங்கப்படவில்லை எனவும் இது ஒரு தற்காலிக ஏற்பாடு எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6-19)

# விஜயநகர காலத்து ஓவியங்கள்

106

பதினான்காம் நூற்றாண்டில் உருவாகிப் படிப்படியாக வளர்ச்சி பெற்ற விஜயநகரப் பேரரசு தென்னிந்தியப் பிரதேசங்கள் பலவற்றை உள்ளடக்கிய விசாலமான, வளம் பொருந்திய இராச்சியமாக விளங்கியது. அக் காலத்திற் தென்னிந்தியாவிலே பொருளாதார உற்பத்தி பெருகியதன் காரணமாகத் தூர தேசங்களுடன் வாணிபத் தொடர்புகள் மிகுந்தளவில் ஏற்பட்டன. விஜயநகரப் பேரரசில் இந்து கலாசாரம் சிறப்புற்று அபிவிருத்தியடைந்தது.



கர்நாடக தேசத்திலும் தமிழகத்திலும் அமைந்திருந்த கோயில்கள் மேலும் பெருவளர்ச்சி அடைந்தன. கல்யாண மண்டபம், இராஜகோபுரம், பல சுற்றுப் பிரகாரங்கள் என்பன மேலதிகமாக அமைக்கப்பட்டதால் இந்துக் கோயில் அளவிலே பேரமைப்பாகியது.

கட்டடக் கலையிலே விஜயநகர காலத்திற் சில புதிய சிறப்பம்சங்களும் ஏற்படலாயின. அக்காலத்துக் கோயிலமைப்புகள் அலங்கார வேலைப்பாடுகள் மிகுந்தவை. கோயிலின் எல்லாப் பக்கங்களிலும் குறிப்பாச் சுவர்ப் புறங்களில் இடைவெளியின்றிச் சிற்பங்கள் நிரை நிரையாக அமைக்கப்பட்டன. தூண்களின் அமைப்பிலே பல அபிவிருத்திகள் ஏற்படலாயின.

முக மண்டபத்திலும், கல்யாண மண்டபத்திலும், ஆயிரங்கால் மண்டபத்திலும் அமைந்த தூண்கள் ஒவ்வொன்றும் பல உறுப்புகளை உடையனவாகக் காட்சியளித்தன. நடுவிலுள்ள தூணைச் சுற்றி வேறுபாடான அளவிலமைந்த பல கற்றூண்கள் அதனுடன் இணைக்கப்பட்டன. காண்போர் மருளும் வனப்புமிக்க சிற்பங்கள் ஒவ்வொரு பாகத்திலும் உருவாக்கப்பட்டன.

விஜயநகர காலத்திலே ஓவியக்கலை முற்கால மரபுகளின் அடிப்படையிலே பெரிதும் விருத்திபெற்றது. சுவர்களிலும் விதானங்களிலும் வண்ணமை கொண்டு சித்திரங்களை வரையும் மரபு பொது வழமையாகியது. உடையலங்காரங்களிலும் அணிகலன்களைப் பொறுத்தவரையிலும் புதிய முறைகள் வழக்கில் வந்தன.

விஜயநகர காலத்துச் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் காலத்திற்குச் சிறப்பாகவுள்ள வழமைகள் நன்கு பிரதிபலிக்கப்படுகின்றன. பொதுவாகத் தேவர்களதும் மனிதர்களதும் உருவங்கள் வஸ்திராலங்காரம் உடையனவாகவே காணப்படும். வஸ்திரங்களும் தற்காலத்தில் வழங்கும் மாதிரிகளுக்கு ஒப்பானவையாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசர்,பிரதானிகள், உயர் குழாத்தினர் முதலியோரின் உருவங்களிலே அங்க வஸ்திரங்கள் உடலுறுப்புக்களை மூடியவண்ணம் அமைந்திருக்கும் சேலையினை அணிந்த கோலத்திற் பெண்களின் உருவங்கள் காணப்படும்.

ஆடை வண்ண வேலைப்பாடுகள் பொருந்தியதாகவும் கவர்ச்சிகொண்டதாகவும் அமைந்திருக்கும். அவற்றிலே கோடுகளும் மடிப்புக்களும் வனப்புடன் செம்மையாக அமைந்து காணப்படும். அங்கலக்ஷணங்கள் சோழர் காலத்துச் சித்திரங்களில் உள்ள வற்றைக் காட்டிலும் சற்று வேறுபட்டனவாயி ருக்கும்.

இன்றுவரை எஞ்சியுள்ள ஓவியங்கள் பெரும்பான்மையுங் சமயச் சார்புடையவை என்பதால் அவை சைவம், வைணவம், சமணம் ஆகிய சமய நெறிகளோடு சம்பந்தமானவையாகவே காணப்படுகின்றன. சமணக் கோயில்களிலுள்ள ஓவியங்கள் வர்த்தமான மகாவீரரின் பிறப்பு, வளர்ப்பு, சமண சமய வரலாறு முதலியவற்றைப் பற்றிய விடயங்களைப் பொருளாகக் கொண்டு அமைந்திருக்கும்.

சைவ,வைணவக் கோயில்கலே காணப்படுஞ் சித்திரங்கள் புராணக்கதைகளையும் மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றின் அம்சங்களையும் காட்சிகளாகக் கொண்டுள்ளன.

விஜயநகர காலத்து ஓவியங்களின் சுவடுகள் ஹம்பி, ஆனைக்கொந்தி, தாட்பத்ரி, காஞ்சிபுரம், கானஹஸ்தி, திருப்பதி,திருவண்ணாமலை, சிதம்பரம், திருவாரூர், கும்பகோணம்,திருவரங்கம் முதலாக இடங்களிலுள்ள கோயில்களிலே காணப்படுகின்றன.

### 1.திருப்பருத்திக் குன்றத்து ஓவியங்கள்

விஜயநகர காலத்து முதலாவது கட்டத்திற்குரிய ஓவியங்கள் திருப்பருத்திக் குன்றத்து வர்த்தமானர் கோயிலில் அமைந்துள்ள சங்கீத மண்டபத்திலே காணப்படுகின்றன. தமிழகத்துச் சமண சமயத்தலங்களில் திருப்பருத்திக் குன்றம் பிரதானமான ஒன்றாகும்.அது நீண்டகால வரலாறு கொண்ட தலமாக விளங்குகின்றது.



அங்குள்ள கோயில் 14ஆம் நூற்றாண்டிலே புனரமைக்கப்பட்டது. அது இருகப்ப என்னும் பிரதானியின் திருப்பணியாகும். இரண்டாம் புக்கராயனின் அமைச்சனாகவும் சேனாதிபதியாகவும் இருகப்ப விளங்கினார். அவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர். அக்கோயிலின் சங்கீத மண்டபத்து விதானத்திலே 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. அவை பெரும்பாலும் சிதைவடைந்துள்ளன.

அங்கிருந்த சித்திரங்களின் சில அம்சங்கள் மட்டுமே இன்றுவரை எஞ்சியுள்ளன. ஒரு காட்சி வர்த்தமான மகாவீரரின் பிறப்பினைப் பற்றியதாகும். அவருடைய தாயாரான பிரிய காமினியின் உருவஞ் சித்திரிக்கப்பட்டுள்ளது.

குழந்தை பிறந்தவுடன் அதனை நீராட்டி, அதற்கு என்ணெய் பூசும் நிகழ்ச்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை சௌதர்மேந்திரனும் மனைவியாகிய சசியும் செய்து முடித்தனர். அவர்களின் உருவங்கள் வனப்புடன் காட்சியளிக்கின்றன. ஆடையலங்காரங்களும் முகபாவனைகளும் சமகாலத்து வழமைகளை யதார்த்தபூர்வமாகப் பிரதிபலிக்கின்றன. இன்னுமொரு சித்திரத்திலே வர்த்தமானரின் முன்னிலையிற் சௌதர்மேந்திரர் பாத சுவஸ்திக கரணத்தில் நடனமாடுங் கோலந் தெரிகின்றது.

### 2. விருபாக்ஷர் கோவில் ஓவியங்கள்

**1. வித்யாரண்யர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படல்.**

விஜயநகரத்தில் அமைந்த விருபாக்ஷர் கோயிலின் முகமண்டபத்தின் விதானத்திலே சிறப்பு வாய்ந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அங்குள்ள காட்சியொன்று விஜயநகர இராச்சியத்தின் தோற்றத்திற்கும் ஆரம்பகாலவளர்ச்சிக்கும் உந்து சக்தியாக விளங்கிய வித்யாரண்யரைப் பற்றியதாகும்.

அவரைப் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு ஊர்வலமாகப் போகுங் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. அவருக்கு முன்னும் பின்னுமாகப் பெரியதோர் கூட்டம் செல்வதைக் காணலாம். யானைகளும், குதிரைப் படைகளும், ஒட்டகங்களும்,குழல் வாசிப்பவர்களும், மேள தாள வாத்தியக்காரர்களும் அவர்களோடு பெருந்திரளான மக்களும் செல்லுங் காட்சி தெரிகின்றது.

பதினான்காம் நூற்றாண்டிலே இடம்பெற்றதாகக் கருதிய ஒரு நிகழ்ச்சியை 16 ஆம் நூற்றாண்டிலே இங்கு ஓவியமாக வரைந்துள்ளனர்.

**2.சுயம்வரக் காட்சிகள்**

இதற்கு அப்பால் மூன்று காட்சிகள் அமைந்துள்ளன. அவற்றிலொன்று துருபதனுடைய இராசதானியிலே, விசித்திரமான சுழலுஞ் சக்கரத்தை அம்பினால் எய்து அரிய சாதனை புரிந்ததன் பயனாக அர்ச்சுனன் பாஞ்சாலியைத் துணைவியாகப் பெற்றமை பற்றியதாகும்.

இதனையடுத்துக் காணப்படுவது எவராலும் வளைக்க முடியாத மகேஸ்வரனுடைய பிரமாண்டமான வில்லினை வளைத்துத் தனது தனியாண்மையைச் ஜனகமகாராசனது அரச சபையிலே ஏற்பட்ட இராமன் நிலை நிறுத்தியும் அதன் பயனாக ஏற்பட்ட சீதா - இராமன் கல்யாணக் காட்சி யும் உருவமாகி அமைந்துள்ளன. அத்துடன் இராமனது தம்பியரின் திருமணக் கோலங்களுந் தெரிகின்றன. அவை ஜனக மகாராசனின் அவையிலே ஈடேறிய நிகழ்ச் சிகளாகத் தெரிகின்றன. அவற்றிற்கு அப் பால் திருமால் அவதாரங்களும் திரிபுராந்த கரின் உருவமும் மதனாந்தகரின் கோலமும் ஒரு வரிசையிலே அமைந்துள் ளன. அவை எல்லோராவிலும் கங்கைகொண்ட சோழ புரத்திலும் அமைந்துள்ள வடிவங்களினின் றும் முற்றிலும் வேறுபட்டனவாகும்.

### 3.லெபாக்ஷி ஓவியங்கள்

லெபாக்ஷி என்னும் ஊர் ஆந்திர தேசத்தில், அனந்தபுரம் என்னும் மாவட்டத்தில் அமைந்திருக்கின்றது.அது இந் நாட்களில் ஒரு சிற்றூராகவே காணப்படுகின்றது. முன்னொரு காலத்தில் வர்த்தகப் பாதைகளின் மையமாக விளங்கியது.

மேலும் தீர்த்த யாத்திரைகள் போகும் வழியில் அது அமைந்திருந்தமையுங் குறிப்பிடத்தக்கது. லெபாக்ஷியில் வரலாற்றுச் சிறப்படைய ஆலயம் ஒன்று அமைந்திருக்கின்றது.

அது முற்காலங்களில் விஜயநகர கலைப்பாணியின் பிரதான மையங்களில் ஒன்றாக விளங்கியது. அங்கே ஹொய்சலர் காலத்துக் கலைப்பாணிக்குரிய கட்டட அமைப்பைப் பின்பற்றி லெபாக்ஷி கோயில் அச்சுதராயர் காலத்தில் விரூபண்ண நாயக்கர், வீரண்ண நாயக்கர் என்னும் இரு சகோதரர்களால் அமைக்கப்பட்டது. அவர்கள் இருவரும் அப் பிராந்தியத்தில் அரசப் பிரதிநிதிகளாக இருந்தனர்.

ஆலயம் புதிய திருப்பணியாகும்.அது விஜயநகர கலைப்பாணிக்குரிய சிறப்பம்சங்களுடன் விளங்கியது. நிர்மாணகாரர் இருவரும் பேணுகொண்டாவைச் சேர்ந்த நந்திலக்கி செட்டியின் மக்களாவர். அவர்கள் வீரபத்திரக் கடவுளைக் குலதெய்வமாகக் கொண்டவர். லெபாக்ஷி ஆலயம் மூன்று ஆலயங்கள் இணைந்த கட்டட அமைப்பாகும். மூன்று கோயில்களும் கூடி முக்கோண வடிவமாய் அமைந்துள்ளன. அவற்றினிடையே ஆலயங்கள் மூன்றுக்கும் பொதுவான மண்டபமொன்று அமைந்திருக்கின்றது.

அதன் விதானத்திலே வீரபத்திரக் கடவுளின் பெருவடிவமான ஒன்றும் கடவு ளை வழிபடும் கோலத்தில் விருபண்ண, வீரண்ண என்போரின் உருவங்களும் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

லெபாக்ஷி கோயிலில் எழுதப்பட்டுள்ள அச்சுதராயர் காலத்து சாசனங்களில் பலஅரிய செய்திகள் சொல்லப்படுகின்றன. நிர்மாண காரரைப் பற்றிய விபரங்களும் கோயிலைப் பற்றிய செய்திகளும் சுற்றாடலைப்பற்றிய வர்ணனைகளும் அவற்றிலே அடங்கியுள்ளன. மூன்று கோயில் களும் சிவன், விஷ்ணு , வீரபத்திரர் என்போ ரை முறையே மூலவராகக் கொண்டவை. சிவன் கோயில்

பேராசிரியர் சி.பத்மநாதன்

விஷ்ணு கோயிலை நோக் கிய வண்ணம் அமைந்துள்ளது. மூன்றாவது கோயிலான வீரபத்திரர் கோயில் இங்கு மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. லெபாக்ஷி கட்டட அமைப்பில் உட்கோபுரத்திற் கும் அர்த்த மண்டபத்திற்கும் இடையிலமைந்த மண்டபமே மிக அழகானதும் கவர்ச்சி பொருந்தியதுமான அமைப்பாகும். (தொடரும்)

# மகிந்தவுக்கு ஆதரவான யோசிதவின் பிரசாரத்தை தடை செய்யவேண்டும்

## -எதிர்க்கட்சிகள் தெரிவிப்பு-

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அவரின் மகன் பிரசாரம் செய்வதை கடற்படை தளபதி தடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து கடற்படையில் உள்ள அவரின் மகன் யோசித ராஜபக்ஷ பிரசாரம் மேற்கொள்வதை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் திஸாரா சமரசிங்கா தடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்துள்ள விதிகளின் அடிப்படையில் கடற்படையினர் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட முடியாது.

எனவே இலங்கை கடற்படையில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் மகன் சப் லெப்டினன்ட் யோசித ராஜபக்ஷ தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதை கடற்படை தளபதி தடுக்க வேண்டும் என தேசிய ஜனநாயக முன்னணி கடற்படை தளபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. (2-6)

# எமது அமைதியை பலவீனமாக எவரும் கருதிவிடக்கூடாது

## மைத்திரிபால சிறிசேன



எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியின் பொறுமையைப் பரிசீலனை செய்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடாது எனவும் அவ்வாறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும் தமது அமைதியைப் பலவீனமாக எவரும் கருதக்கூடாது எனத் தெரிவித்த அவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவு அமைப்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் நடைபெற்ற இரகசிய ஒப்பந்தம் முழு நாட்டிற்கும் அம்பலமாகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என ரணில் விக்கிரமசிங்க, அனுரகுமார திஸாநாயக்க, மங்கள சமரவீர மற்றும் ஆர். சம்பந்தன் ஆகியோர் ஒப்பந்தம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது த்மிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தணித்து நின்று முன்னெடுத்ததனைப் போன்று ஜெனரல் சரத் பொன்சேகா செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## தொழிலாளருக்கு

# போலியான வாக்குறுதிகளை வழங்க சிலர் சதித் திட்டம் - ஜனாதிபதி

(கொழும்பு)


பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்க சில சக்திகள் சதித் திட்டம் தீட்டி வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

கொட்டகலை பிரதேசத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மலையக எழுச்சி என்ற திட்டத்தின் கீழ் மலையக மக்களின் கனவுகள் மெய்ப்பிக்கப்படக்கூடிய காலம் தொலைவில் இல்லை என்றும் நிச்சயமாக தோல்வியைத் தழுவுவோம் என்ற பீதி காரணமாக சிலர் மக்களுக்கு போலியான வாக்குறுதிகளை வழங்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.



மேலும் லயன் அறை வாழ்க்கையை இல்லாதொழித்து மின்சாரம், குடிநீர், சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகளை மலையக தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க உள்ளதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (2-6)





யாழ். இராமநாதன் கல்லூரியின் நூலக தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக நூலகர் திருமதி கருணானந்தராஜா மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் நிற்பதையும் விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற புத்தகக் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# முன்னர் போல பொதிகளை புகையிரதம் மூலம் அனுப்பலாம்

## அரசின் தடை நீக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு வழமைக்குத் திரும்பியுள்ளதன் காரணமாக புகையிரதம் மூலம் பொதிகளை அனுப்பிவைப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அரசாங்கம் நீக்கியுள்ளது.

இதனையடுத்து, புகையிரதம் மூலம் அனுப்பப்படுகின்ற பொதிகளை ஏற்றுக் கொள்ளுமாறு சகல புகையிரத நிலைய அதிபர்களையும் புகையிரதத் திணைக்களம் கேட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வருடத்தில் அனுமதிச் சீட்டு இன்றி பயணித்த 17,195 பிரயாணிகளிடமிருந்து பெருமளவு நிதியினை இலங்கை புகையிரதத் திணைக்களம் தண்டப்பணமாக வசூலித்துள்ளதாக தெரிவித்துள்ளது. (2-6)

# மக்கள் மத்தியில் அதிகரிக்கும் ஆட்சி மாற்றத்திற்கான நிலைப்பாடு

## ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத்பொன்சேகாவின் மீது அரசாங்கம் தொடர்ந்தும் சேறு பூசி வருகிறது. இவ்வாறு தொடர்ந்தும் சேறு பூசி விமர்சித்து வந்தால் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொள்ளலாம் என அரசாங்கம் கனவு காணுகிறது.

பொது மக்கள் மாற்றமொன்றிற்கான முடிவினை எடுத்துவிட்டார்கள் என்று ஐ.தே.க.வின் கம்பஹா மாவட்ட எம்.பி. ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

நாளுக்கு நாள் இன, மத, மொழி வேறுபாடின்றி ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கான ஆதரவு மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

இதுவரையிலும் 55 வீதத்திற்கும் அதிகமான ஆதரவு ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு கிடைத்துள்ளது என்றும் அவர் கூறினார். ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்பொழுது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தை மாற்றி புதிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கு பொதுமக்கள் தீர்மானித்துவிட்டார்கள் என்றும் அவர் கூறினார். (2-6)

# பொன்சேகாவின் முதற்பணி வடக்கு கிழக்கின் ஆயுதக் குழுக்களை அகற்றுவதே-ஜே.வி.பி

(கொழும்பு)

ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதே அவரின் முதற்பணியாக இருக்கும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட அமரசிங்க மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் எங்கு பிரசார கூட்டத்திற்குச் சென்றாலும் மக்கள் எம்மை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

எனவே அவர்கள் தற்போது சர்வாதிகார ஆட்சியில் உள்ளவர்களை அகற்றவே விரும்புகின்றனர்.

நாம் நாட்டின் எல்லாப்பகுதிகளுக்கும் சென்றுள்ளோம். அப்போது நாம் ஆட்சியை மாற்றப்போகிறோம் என்ற நல்ல செய்தியுடன் வருவதை மக்கள் வரவேற்றுள்ளனர்.

ஜனவரி 26ஆம் திகதிக்கு பின்னர் அவர்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த போகின்றனர்.

மேலும் தனக்கு தயவு காண்பித்து வாக்களிக்குமாறு மகிந்த மக்களை கேட்டுள்ளார். ஆனால் அவர் மக்களுக்கு எந்த தயவையும் காண்பிக்கவில்லை.

மகிந்தவிற்காக தன்னை அர்ப்பணித்த மங்கள சமரவீரவைக்கூட அவர் துரத்தியிருந்தார். அதில் இருந்து நாம் மகிந்தவின் நன்றி உணர்வை அறிந்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# வடக்கு, கிழக்கு பெண்களின் மறுவாழ்வுக்கான ஏற்பாடுகள்

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போர்ச் சூழலின் போது ஏற்பட்ட அனர்த்தங்களினால் விதவையாக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறுவர் மற்றும் மகளிர் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க குறிப்பிட்டார்.

இதற்கமைய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனமான மகிந்த சிந்தனை தொலை நோக்கில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிகழ்ந்த மோதல்களினாலே அனர்த்த சூழ்நிலைகளாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது அரசின் கடமை என்பதற்கேற்ப,

அவர்களுக்குப் பொருத்தமான பொருளாதார செயற்பாடொன்றை ஏற்படுத்துவதற்காக ரூபா 2 இலட்சம் குறைந்த வட்டி அடிப்படையில் கடனாகப் பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் மேலும்,

- சொந்தக் காணிகளை இழந்த அவ்வாறான ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயிர் செய்வதற்கும் குடியிருப்பதற்கும் அவசியமான காணிகளை வழங்குதல்.
- அவ்வாறான குடும்பங்களில் அங்கவீனர்களாக இருக்கும் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் தேவையான தொழிற்பயிற்சி அல்லது விஷேட கல்வி என்பவற்றிற்காக ரூபா 4 இலட்சம் வரையிலான நிதி ஒதுக்கீடு செய்தல். இவற்றைத் தொடர்ந்து நடைமுறைப் படுத் தவுள்ளோம் என்று அவர் மேலும் கூறினார். (2-6)

# தேர்தல் வன்முறைகளை தடுக்க பாதுகாப்பை தீவிரப்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காவல் துறையினருக்கு கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வன்முறைச் சம்பவங்களினால் இரண்டு பேர் உயிரிழந்ததனை அடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் கடந்த சனியன்று ஆளும் கட்சி ஆதரவாளர் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி தனது ஆழ்ந்த இரங்கலை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய தேர்தலில் ஈடுபடும் சகல கட்சிகளும் வன்முறைகளைக் கைவிட வேண்டுமென ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். (2-6)

# ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை - சரத்பொன்சேகா

(கொழும்பு)

ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். யுத்த காலத்தில் இராணுவத்திற்கு தேவையான ஆயுதக் கொள்வனவு தொடர் பான தீர்மானங்களை பாதுகாப்பு அமைச்சே மேற் கொண்டதென அவர் குறிப் பிட்டுள்ளார்.

அக்குரனை பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற் றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் தம்மீதும் தமது குடும்பத்தார் மீதும் சுமத்தப் பட்டு வரும். குற்றச் சாட்டுக்கள் அடிப்படையற்றவை என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# யாழ். மருத்துவ பீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

மாலபேயில் தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்.மருத்துவபீட மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெறும் என மேற்படி மருத்துவ மாணவர் ஒன்றியம் தெரி வித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மாலபேயில் தனியார் மருத்துவக் கல்லூரி அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல்கலைக்கழக மருத்துவபீடங்களில் கல்வி கற்பித்த பேராசிரியர்கள் பலர் தமது வேலையை இராஜினாமா செய்து மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர்களாக இணைகின்றனர்.

இதனால் பல்கலைக்கழக மருத்துவ பீடங்கள் திறமையான பல பேராசிரியர்களை இழந்துள்ளன.

இதே நிலை மேலும் தொடருமாயின் பல பேராசிரியர்கள், விரிவுரையாளர்களை பல்கலைக்கழக மருத்துவ பீடங்கள் இழக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

ஆகவே மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியானது இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களின் செயற்பாடுகளுக்கு பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

ஆகவே மருத்துவ மாணவர்களாகிய எமக்கு இத் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராகக் குரல் கொடுத்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அதை நிறுத்த வேண்டிய பாரிய சமூகப் பொறுப்புள்ளது. இதன் முதற்கட்டமாக நாம் மற்யை மருத்துவபீடங்களுடன் இணைந்து எமது விரிவுரைகள் அனைத்தையும் தொடர்ந்து பகிஷ்கரிக்கவுள்ளோம் என யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீடம் விடுத்துள்ள 'செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. (ச-3)

## யாழ்ப்பாணத்தில் பாம்பாட்டிகள்

மலையாள பிரதேசத்திலிருந்து வருகை தந்துள்ள பாம்பாட்டிகள் தற்போது யாழ் குடாநாட்டின் பல்வேறு இயங்களுக்கு சென்று பாம்புகளை ஆட்டி வித்தைகளை புரிகின்ற னர்.

இதற்கமைய சந்தைகள் , வீதிகள் போன்ற இடங்களில் பல மக்கள் ஒன்று திரண்டு நின்று இவ்வேடிக்கையை பார்வையிடுவதுடன் பணத்தினையும் வழங்கிவருவதனையும் அவதானிக்க முடிகிறது. (2-30)

## நல்லூர் பிரதேச சபைக்கு வாகனம் கையளிப்பு

உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சினால் நல்லூர் பிரதேச சபைக்கு ''பிக்கப் வாகனம்'' ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம்திகதி உள்ளூராட்சி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோனினால் தம்புள்ளயில் உள்ள உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் வைத்து பிரதேச சபைகளுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்கள் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-30)




சுதந்திர தேசத்தில்
சமத்துவமாய் வாழ..
ஜனநாயகம் நிலைக்க..
எதிர்காலம் செழிக்க..

யாழ்மக்கள் பட்டதுன்பம் பறக்கலாச்சு
தொட்டதெல்லாம் துலங்கும் காலம் தொடங்கலாச்சு!

வன்னிமக்கள் வாழ்வினிலே இருந்த இன்னல்
வளம்மிக்க செயற்பாட்டால் மறையலாச்சு!

எழுகதிரோன் திசையென்னும் கிழக்கு மண்ணில்
ஏற்றமிகு வாழ்வை மக்கள் ஏற்கலாச்சு!

மலையகத்துப் பசுமைமிகு மண்மீதெங்கும்
மலர்ந்துள்ள புது வாழ்வு தொடரலாச்சு!

தமிழ் பேசும் மக்கள் கூடத் தலைநகரில்
தலை நிமிர்ந்து வாழுந் தன்மை தன்னைப் பெற்றார்!

எங்கள் தெரிவு
மஹிந்த ராஜபக்ஷ

தமிழர்தம் வாழ்வில்
வீசட்டும் வசந்தம்

அரசாங்கம்

# வெளிநாட்டுசக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்துள்ளமை புலனாகியுள்ளது

மங்கள



(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் செவ்வி மூலம் அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்துள்ளமை புலனாகியுள்ளதென சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கியதாக லலித் வீரதுங்க வெளியிட்டுள்ள கருத்தின் மூலம் அரசாங்கம் வெளிநாட்டு சக்திகளின் கொள்கைகளுக்கு எவ்வாறு அடிபணிந்து செயற்பட்டுள்ளதென்பது புலனாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா சர்வதேச சக்திகளுடன் இணைந்து செயற்படுவதாக அரசாங்கம் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றபோதிலும் ஆளும் கட்சியே சர்வதேச நாடுகளுடன் உத்தரவுகளுக்கு அமைய செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது சர்வதேச சக்திகளின் அழுத்தங்களுக்கு அடி பணியவில்லை என ஜனாதிபதி செய்துவரும் பிரசாரங்கள் அவரது செயலாளரின் இந்தக் கூற்றின் மூலம் பொய்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# வன்முறைகளற்ற தேர்தலை நடத்த அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

## முக்கிய மாநாயக்க தேரர்கள்

(கொழும்பு)

வன்முறைகளற்ற தேர்தலை நடாத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென நாட்டின் முக்கிய பௌத்த மாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைதியானதும் சுயாதீனமானதுமான முறையில் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவேண்டுமென வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின்போது சேறு பூசும் நடவடிக்கைகள் உச்சத்தை அடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மல்வத்து அமரபுர மல்வத்தை மற்றும் ராமன்ஞான பீடங்களின் பீடாதிபதிகள் இந்த விடயம் குறித்து வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டின் அதியுயர் பதவியான ஜனாதிபதிப் பதவிக்காக நடத்தப்படும் தேர்தலில் நியாயமான முறையில் வாக்களிக்க வேண்டியது அவசியமாகுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவரை ஒருவர் தூற்றும் தேர்தல் பிரசாரக் கலாசாரத்தைப் புறந்தள்ளி சகோதரத்துவடத்துடன் கூடிய பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர்கள் தெரிவித்துள்ளனர். (6)

# வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு சில பகுதிக்கு இன்னும் கிடைக்கவில்லை

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு சில ஆசிரியர்களுக்கு வழங்கப் படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டுகிறது.

குறிப்பிட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்ததாக இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

. எனினும் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு இந்தக் கொடுப்பனவு இதுவரை கிடைக்கவில்லை என அவர் கூறியுள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார கருத்துத் தெரிவிக்கையில், இதற்குத் தேவையான நிதி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் எவ்வாறாயினும் சில வலய கல்விப் பணிமனைகளின் செயற்திறனின்மை காரணமாக இந்த நிலை காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# ஊழல் மோசடி இடம்பெற்றிருந்தால் எவ்வாறு தனிநபர் வருமானம் அதிகரித்திருக்கும்

## அமைச்சர் அனுர பிரியதர்சன கேள்வி



(கொழும்பு)

நாட்டில் நிதி மோசடி இடம்பெற்றிருந்தால் ஆயிரம் டொலராக இருந்த தனி நபர் வருமானம் நூறு சதவீதம் அதிகரித்து 2ஆயிரம் டொலராக இப்போது அதிகரித்திருப்பது எப்படி என்று அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கேள்வி எழுப்பினார். குளியாப்பிட்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர்களிடம் பேசியபோதே அமைச்சர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது இந்த நாட்டின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட தகவல்கள் மற்றும் அபிவிருத்தி ஆவணங்கள் ஆகியவற்றின் விபரங்களையேயாகும்.

எதிர்க்கட்சியினர் கூறுவது போல அரசுக்கு அல்லது ஜனாதிபதிக்கு எதிராக ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அவற்றை நிரூபித்துக் காட்டுமாறு அவர் சவால் விடுத்தார்.

இந்த நாட்டில் அதிக அளவில் ஊழல் இடம்பெற்றிருப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான். ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற அந்த ஊழல் மோசடிகள் தொடர்பாக கோப் அறிக்கை மூலம் முழு நாட்டுக்கும் வெளிப்படுத்தப்பட்டுவிட்டது.

உலகில் உணவுத் தட்டுப்பாடு இருந்து வந்த நிலையில் உலக பொருளாதாரம் சரிவடைந்திருந்த நிலையில் நாட்டின் அபிவிருத்தி வேகம் 5 சதவீதம் என்ற நிலையில் பேணப்படுவதற்கு அரசாங்கத்தால் முடிந்திருக்கின்றது. ஊழல் மோசடி இடம்பெறுவதாக எதிர்க்கட்சியினர் கூறி வருகின்றனர். அப்படியானால் இந்த அபிவிருத்தி வேகத்தை அரசாங்கம் எவ்வாறு தொடர்ந்து பேண முடியும்?

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் அவரது அமைச்சரொருவரின் உறவினரொருவரால் மேற்கொள்ளப்பட்ட வற் வரி மோசடி பற்றியும் அரச நிறுவனங்கள் தமது அரசியல் ஆதரவாளர்களுக்கு அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டதும் நாடறிந்த விடயமாகும்.

அவ்வாறு விற்கப்பட்ட காப்புறுதி கூட்டுத்தாபனம் நீதிமன்ற உத்தரவினால் மீண்டும் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது. கொழும்பு மரைன் நிறுவனத்துக்கு கொழும்பு துறைமுகத்துக்குச் சொந்தமான காணியொன்று குறைந்த விலைக்கு விற்கப்பட்டதும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில்தான் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (2-6)

# ஐ.தே.க. ஆதரவாளர்களின் வாகனங்கள் மீது கல்வீச்சு

## அக்கரைப்பற்றில் சம்பவம்

(கொழும்பு)

அம்பாறையிலிருந்து திருக்கோயில் நோக்கி 30 இற்கும் மேற்பட்ட வாகனங்களில் சென்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட சரமாரியான கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி 20 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அக்கரைப்பற்று, அம்பாறை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் அக்கரைப்பற்று அரசடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் பள்ளிக்குடியிருப்புப் பிரதேசத்தில் இரகசியமான முறையில் நிறுத்திவைக்கப்படிருந்த ஆயுதங்கள் அடங்கிய வெள்ளை வான் ஒன்றை கைப்பற்றிய பொலிசார் அதிலிருந்து 8 பேரையும் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களான தயாகமகே, சந்திரதாஸ கலப்பதி மற்றும் வசந்த பியதிஸ்ஸ எம். பி. ஆகியோர் தலைமையில் அக்கரைப்பற்று தம்பிலுவில் திருக்கோவில், பொத்துவில் ஊடாக அந்த வாகனப் பேரணி செல்ல முற்பட்டபோதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஐ.தே.க. ஆதரவாளர்கள் மீதான தாக்குதலை அடுத்து அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தயா கமேக தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தாக்குதலை அடுத்து அவர்களை திருக்கோயில் செல்வதற்கு பொலிசார் அனுமதி அளிக்கவில்லை. இதனால் பொலிசாருக்கும் தயாகமகே தலைமையிலான குழுவினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. பொலிசாரின் தடையினை அடுத்து அக்கரைப்பற்று நகரின் மத்தியில் உள்ள மணிக்கூட்டுக்கோபுரத்திற்கு அருகில் இவர்கள் கூட்டமொன்றினை நடாத்தினர். கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கூட்டத்தில் கலந்து கொண்டோர் மீது கல்வீச்சு நடத்தப்பட்டது. இந்தக் கல்வீச்சில் ஈடுபட்ட சிலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

ஐ.தே.க. ஆதரவாளர்கள் மீதான தாக்குதல் மற்றும் கூட்டம் என்பனவற்றினால் அக்கரைப்பற்று நகரம் சில மணிநேரம் பதற்றத்திற்குள்ளாகி இருந்தது. இங்கு கடைகளும் மூடப்பட்டதுடன் பொதுமக்களின் நடமாட்டமும் குறைந்திருந்தது. (2-6)



ஊரெழு வீரகத்திப் பிள்ளையார் ஆலய மணி மண்டபத்திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளர் சட்டத்தரணி கந்தையா நீலகண்டன் உரையாற்றுவதையும் ஆலயத் தலைவர் லயன் க. சண்முகநாதன் உரையாற்றுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் மணி மண்டபத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

# 2015 இல் ஐ.நா. தலைமையகத்தை டுபாய்க்கு மாற்ற நடவடிக்கை

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தை நியூயோர்க்கிலிருந்து டுபாய்க்கு மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஐக்கிய நாடு கள் சபைக்கு தலைமையகம் அமைப்பதற் கான இடம்தர தயார் என டுபாய் அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. ஏற்கனவே இந்த வாய்ப்பு சிங்கப்பூருக்கு இருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் அமெரிக்காவில் செயற்பட அமெரிக்காவுக்கு விருப்பமில்லாத காரணத்தால் அதனை நியூயோர்க்கிலிருந்து மாற்றுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் உலக நாடுகளின் தலைமையகமான ஐக்கிய நாடுகள் சபைக்கு உலக நாடுகளின் அனைத்திற்கும் எளிதில் செல்வதற்கான இடமாக இருக்க வேண்டுமென்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு ஐ.நா.அதிகாரிகளை அழைத்துள்ள டுபாய் அரசு தலைமையகத்தை அங்கே அமைப்பதால் ஏற்படும் சந்தேகங்கள் குறித்து ஐ.நா. அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்த தயாரென்றும் கூறியுள்ளது.

பூகோள அமைப்பில் டுபாய்க்கு நிறைய சிறப்புகள் உண்டு. உலகத்தின் எந்த மூலையிலிருந்தும் எளிதாகச் சென்றடையக் கூடிய நகரம், உலகத்திலேயே மாநாடு நடத்துவதற்கான இடமாகவும் கருதப்படுகிறது. மேலும் சர்வதேச தரத்திலான அடிப்படை வசதி வாய்ப்புகள் நிறைந்த இடமாகவும், அது கருதப்படுகிறது. இதன் கடல்வழி, விமானவழி, சாலைவழி போன்ற போக்குவரத்து வாய்ப்புகள் போன்றவை ஐக்கிய நாடு சபை எப்பொழுதும் பரபரப்பாக இயங்குவதற்கு ஏற்றவை என்று கருத்தில் கொள்ளப்படுகிறது.

உலக சமாதானத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் ஐ.நா. நடத்தும் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாகத் தான் ஐ.நா.வின் தலைமையகத்தை டுபாய்க்கு கொண்டு வருவதற்கான முயற்சி என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகள் அதிகமான தொடர்பாங்களிப்பை உறுதி செய்யும் விதமாக ஐ.நா. தலைமையகத்தின் இடம்மாற்றம் தங்களுக்கு உதவும் என டுபாய் அரசு அறிவித்துள்ளது.

இதற்கிடையே போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் ஐ.நா.சபை அமெரிக்காவில் இருப்பதால் செலவுகள் அதிகரித்து அது அமெரிக்கா குடிமகன்கள் மீது வரிச்சுமையை ஏற்படுத்துவதாக கூறியுள்ளது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இந்த செய்தி அறிக்கையிலும் ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா நாடுகளில் அதிக வசதிகள் உள்ள டுபாய்தான் எதிர்காலத்தில் உலகத்தின் தலைமையகமாக சிறந்தது என்றும் "யுனைட்ட் நேசன்ஸ் சிட்டி" டுபாய் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# இங்கிலாந்து பாராளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிக்கு வெற்றி வாய்ப்பு

## கருத்துக்கணிப்பில் பரபரப்பு தகவல்

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டில் எதிர்வரும் ஜூன் மாதம் பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. அந்தத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றிபெறும்? என்பது குறித்து அந்த நாட்டில் உள்ள பத்திரிகைகள் சார்பாக கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் நடந்த கருத்துக்கணிப்பில், எதிர்க்கட்சியான "கன்சர்வேடிவ் கட்சிக்கு" 9 சதவீதம் கூடுதலாக வாக்குகள் கிடைத்தன.

இந்த நிலையில், தற்போது நடந்த கருத்துக்கணிப்பில் எதிர்க்கட்சிக்கு வெற்றிவாய்ப்பு மேலும் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

புதிய கருத்துக்கணிப்பின்படி, கன்சர்வேடிவ் கட்சிக்கு 42 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன. ஆளுங் கட்சியான ' லேபர் கட்சி'க்கு 29 சதவீத வாக்குகளும், மூன்றா வது கட்சியான லிபரல் டெமாக்ரடிக் கட்சிக்கு 19 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

கடந்தமாதம் இருந்தது போலவே, " லேபர் கட்சி' மற்றும் ' லிபரல் டெமாக்ரடிக் கட்சி" ஆகிய இரண்டு கட்சிகளின் வாக்கு சதவீதம் அப்படியே தொடருகிறது. ஆனால், எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சிக்கு இந்த மாதம் 44 சதவீத வாக்குகள் அதிகரித்துள்ளன.

எனவே, ஆளுங் கட்சியை விட 13 சதவீதம் முன்னிலையில் இருக்கிறது. கருத்துக் கணிப்புகளில் கிடைத்த முடிவுகளின்படி, இந்த அளவு வாக்குகள் கிடைத்தாலே எதிர்க் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியால் ஆட்சியைக் கைப்பற்ற முடியும். மேலும் இதன்மூல மாக, பாராளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு தேவையான 70 இடங்களை அந்தக் கட்சியால் கைப்பற்ற முடியும். சர்வதேச நிதி நெருக்கடியே, இங்கிலாந்து மக்களின் இத்தகைய முடிவுக்கு காரணமாகும்.

ஆளுங் கட்சி யான லேபர் கட்சியால், நிதி நெருக்கடியை சரியாகக் கையாள முடியவில்லை என்றும் அதற்கு தகுந்த கொள்கைகளை அந்த கட்சி வகுக்கவில்லை என்றும் 60 சதவீதம் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பில் மன்னிலை வகித்து வரும் கன்சர்வேடிவ் கட்சி நாங்கள் வெற்றிபெற்று ஆட்சியில் அமர்ந்தால் இந்த ஆண்டுகள் இங்கிலாந்து நாட்டின் பற்றாக்குறை நிலைமையை தடுப்போம். இங்கிலாந்துப் பொருளாதாரத்தை பாதுகாப் பான நிலைமைக்குக் கொண்டு செல்வோம் என்று தெரிவித்துள்ளது. (2-6)




# நான்காவது தடவையாக அலிஹசனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

கெமிக்கல் அலி என அழைக்கப்படும் ஈராக்கின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான அலி ஹசன் அல் மஜீடுக்கு நான்காவது தடவையாக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குர்திஸ் இனத்தவர்களை நச்சு வாயுப் பிரயோகம் செய்து படுகொலை செய்த குற்றத்திற்காக இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மூன்று வழக்குகளில் கெமிக்கல் அலிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கெமிக்கல் அலி ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1988 ஆம் ஆண்டு குர்திஸ் நகரான ஹஸ்பாஜாவில் இந்த கொடூர சம்பவம் அரங்கேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்த நச்சு வாயுத் தாக்குதலில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட 5 ஆயிரம் குர்திஸ் இனத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கெமிக்கல் அலி முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கெமிக்கல் அலி விரைவில் தூக்கலிடப்பட்டு கொல்லப்படுவார் என அந்நாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (2-6)

# ஹெயிட்டியில் தொடரும் அவலம் அழுகிய நிலையில் மீட்கப்படாத உடல்கள்

(போர்ட் - ஒவ்-பிரின்ஸ்)

கரீபியன் கடல் பகுதியில் உள்ள ஹெயிட்டி நாட்டில் கடந்த 12 ஆம் திகதி 7.0 ரிக்டர் அளவில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இதில் தலைநகர் போர்ட் -ஆவ் -பிரின்சில் உள்ள அதிபர் மாளிகை உட்பட பெரும்பாலான கட்டடங்கள் நொறுங்கியமை தெரிந்ததே.

நொறுங்கிய கட்டடங்களின் இடிபாடுகளில் சிக்கி சுமார் 2 இலட்சம் பேர் பலியாகிவிட்டனர். இவர்களில் இதுவரை சுமார் ஒரு இலட்சம் பேரின் உடல்கள் மீட்கப்பட்டுவிட்டன.

தற்போது இராட்சத குழிகளாகத் தோண்டி அவற்றை மொத்தமாக புதைத்து வருகின்றனர். உருக்குலைந்து கிடக்கும் ஹெயிட்டியில் மீட்புப் பணியில் அமெரிக்கா உள்ளிட்ட 30 நாடுகள் விரைந்துள்ளன.

அவர்கள் இடிபாடுகளை அகற்றி அதில் இறந்து கிட்ப்பவர்களின் பிணங்களை மீட்டு வருகின்றனர்.

இருந்தும் முழுமையாக பிணங்களை மீட்க முடியவில்லை. அகற்றப்படாமல் இன்னும் ஒரு இலட்சம் உடல்கள் இடிபாடுகளுக்குள் கிடக்கிறது.

பூகம்பம் ஏற்பட்டு 6 நாட்கள் ஆகியும் பிணங்களை மீட்காததால் அவை அழுகி துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அங்கு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது.

இதற்கிடையே பூகம்பத்தில் உயிர் பிழைத்த மக்கள் உணவு, தண்ணீர் , மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் தவியாய் தவிக்கின்றனர். கடந்த 6 நாட்களாக உணவு கிடைக்காததால் ஒருவரையொருவர் அடித்து பிடுங்கி சாப்பிடும் நிலை உள்ளது.

இதனால், அங்கு உள்நாட்டு கலவரம் ஏற்பட்டுள்ளது. எனவே பாதுகாப்புப் பணிக்காக அமெரிக்கா 3 ஆயிரத்து 500 இராணுவ வீரர்களை அனுப்பியுள்ளது. மீட்புப் பணியில் ஈடுபட்ட அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கையிலும் உள்ளனர்.

இவர்கள் மட்டுமன்றி ஐக்கிய நாடுகள் சபையும் மீட்புப் பணிக்காக தனது படையை அனுப்பியுள்ளது. அவர்கள் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டு காயம் அடைந்தவர்கள் மற்றும் வீடு இழந்தவர்களுக்கு உதவி செய்து வருகின்றனர்.

மேலும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள நாடுகள் மருத்துவ குழுக்களையும் அனுப்பியுள்ளனர். டாக்டர்கள் மற்றும் மருத்துவக் குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகளின் சபை பொதுச் செயலாளர் பான்கீமூன் ஹெயிட்டியின் தலைநகர் போர்ட் ஆப் பிரின்ஸ் நகருக்கு நேற்று முன்தினம் நேரில் சென்றுபார்த்தார். உருக்குலைந்து கிடக்கும் அதிபர் மாளிகையை நேரில் சென்று பார்த்தார்.

அப்போது அவரை பொதுமக்கள் முற்றுகையிட்டனர். சாப்பாடு எங்கே? எங்களுக்கு வேறு என்ன உதவி செய்யப் போகிறீர்கள் என்று கூச்சலிட்டனர். அவர்களை பான்கீமூன் சமாதானப்படுத்தினார்.

பூகம்பத்தில் போர்ட் ஆப் பிரின்ஸ்சில் இருந்த சிறைச்சாலை இடித்து சேதம் அடைந்தது.

2ஆயிரம் பொலிஸார் காயம் அடைந்துள்ளனர். சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரம் கொள்ளையர்கள் தப்பிவிட்டனர். எனவேதான் அங்கு வழிப்பறி மற்றும் வன்முறை சம்பவங்கள் நடக்கிறது எனத் தெரிகிறது. (2-6)

# பாகிஸ்தானில் தலிபான்கள் மீது அமெரிக்கா ஏவுகணை தாக்குதல்

பாகிஸ்தானில் ஆள் இல்லாத விமானங்கள் மூலம் ஏவுகணை வீசி வருகின்றது. கடந்த வாரம் வியாழக்கிழமை முதல் தெற்கு வசீரிஸ்தானில் உள்ள ஷக்தோய் பகுதியில் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

இங்குதான் பாகிஸ்தான் தலிபான் தலைவர் ஹஜி முல்லா மசூத் தனது கூட்டாளிகளுடன் பதுங்கியுள்ளதாக உளவுத்துறை மூலம் தகவல் கிடைத்துள்ளது.

நேற்று முன்தினம் நடத்திய ஏவுகனை தாக்குதலில் தலிபான்கள் பதுங்கியிருந்த வீடுகள் இடிந்து சேதமடைந்தன. இதில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பலியானோர் எண்ணிக்கை மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தகவலை பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்கு கடந்த 14 ஆம் திகதி முதல் நடைபெற்ற 3 தாக்குதல்களின் தலைவர் ஹஜி முல்லா மசூத் தப்பிவிட்டார். அவர் கொல்லப்பட்டு விட்டதாக முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் அதை மறுத்துள்ளார் அவரது பேச்சு ஓடியோ மூலம் வெளியிடப்பட்டது தெரிந்ததே. (2-6)


# குண்டானவர்கள் கூட்டத்தால் அறை இடிந்து வீழ்ந்தது

சுவீடன் நாட்டில் குண்டானவர்களுக்கு எடையைக் குறைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒரு கட்டடத்தில் நடந்தது. கட்டடத்தின் முதல் மாடியில் உள்ள ஒரு அறையில் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. அதில் 150 கிலோவுக்கு அதிகமான எடைகொண்ட 20க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

அப்பொழுது அறையின் மூலைப் பகுதியில் திடீரென விரிசல் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து அந்த அறையின் தரை மற்றும் சுவர்கள் அனைத்தும் இடிந்து விழுந்தன. அதிர்ஷ்டவசமாக கூட்டத்தில் பங்கேற்ற யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இடியாமல் இருந்த பகுதிவழியாக அவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

கூட்டத்தில் பங்கேற்ற ஒருவர் கூறுகையில், மிகப் பெரியசப்தம் கேட்டது. நிலநடுக்கம் ஏற்பட்டுவிட்டதோ என்று நாங்கள் பதறினோம். அனைவருமே அந்தரத்தில் பறப்பது போல உணர்ந்தோம் என பீதியுடன் தெரிவித்தார்.

குண்டானவர்கள் நிறைந்திருந்த அறை எப்படி விழுந்தது என்பது குறித்து விசாரணை நடைபெற்றுவருகிறது. (2-6)



முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 93ஆவது பிறந்தநாளையொட்டி சென்னையில் அ.தி.மு.க. கட்சியின் தலைமை அலுவலகத்தில் உள்ள அவரது சிலைக்கு கட்சியின் பொதுச் செயலர் ஜெயலலிதா மாலையிட்டு மரியாதை செலுத்தினார்.

# இந்திய விளையாட்டுப் பொருட்களில் அதிகளவில் நச்சு இரசாயனங்கள்

இந்தியாவில் விற்கப்படுகின்ற பல பிளாஸ்டிக் விளையாட்டு பொருட்களில் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பாதிப்பை உண்டாக்கக்கூடிய நச்சு இரசாயனங்கள் உள்ளன என்று இந்தியாவின் முன்னணி சுற்றுச் சூழல் பாதுகாப்புக்குழு கூறியுள்ளது.

பிளாஸ்டிக்கை மென்மையாக்க உதவும் ப்தாலேட்ஸ் எனப்படும் நச்சு இரசாயனம் விளையாட்டுப் பொருட்கள் உற்பத்தித் துறையினரால் பயன்படுத்தப்படுவது தொடர்பில் இந்தியாவில் எவ்வித ஒழுங்கு விதியும் இல்லை என்று அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் கூறுகிறது.

இந்தியாவில் விற்கப்படும் பலவித விளையாட்டுப் பொருட்களையும் ஆராய்ந்த இந்தக்குழு, அவற்றில் அதிக அளவில் ப்தாலேட்ஸ் இரசாயனம் இருப்பதாகக் கண்டறிந் துள்ளது.

கிட்டத்தட்ட பாதியளவிலான விளையாட்டுப் பொருட்களில், சர்வதேச ரீதியில் அனுமதிக்கப்பட்ட அளவுகளை விட அதிகமான இரசாயனம் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. (2-6)

# தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தை தூக்கிச் சென்ற கொள்ளையர்கள்

(புதுடில்லி)

டெல்லி அருகே நொய்டாவில் ஆல்பா வணிக வளாகம் உள்ளது. அங்கு வங்கியின் தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்கள் (ஏ.டி.எம்) அமைக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள ஒரு ஏ.டி.எம் முக்கு நேற்று முன்தினம் இரவு ஒரு பெரிய வேனில் 3 பேர் வந்தனர். ஒருவன் பணம் எடுப்பது போல உள்ளே சென்றான். வெளியில் மற்ற 2 பேரும் நின்று கொண்டனர்.

உள்ளே சென்றவன் சிறிது நேரத்தில் திரும்பி வந்து, பணம் வரவில்லை ஏ.டி.எம் வேலை செய்கிறதா? என்று பாருங்கள் என்று ஏ.டி.எம் காவலாளியை அழைத்தான். அதை உண்மை என்று நம்பி காவலாளி உள்ளே சென்றார்.

அவர் பின்னாலேயே வெளியில் நின்ற 2 வாலிபர்களும் சென்றனர். உள்ளே 3 இளைஞர்களும் சேர்ந்து காவலாளியை அடித்து உதைத்து கயிற்றால் கை, கால்களை கட்டி போட்டனர்.


பிறகு 3 இளைஞர்களும் ஏ.டி.எம். எந்திரத்தை அடித்து உடைத்து பெயர்த்தனர். பிறகு வெளியில் நின்றிருந்த வேனில் ஏற்றி கொண்டு சென்றுவிட்டனர்.

நீண்ட நேரத்துக்கு பிறகு பக்கத்து ஏ.டி.எம். காவலாளிகள் தேடியபோதுதான் கொள்ளையர்கள் எந்திரத்தை தூக்கி சென்றது தெரிய வந்தது. அந்த எந்திரத்தில் 32 இலட்சம் ரூபாய் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வங்கி ஊழியர்கள் சிலருக்கு இந்த கொள்ளையில் தொடர்பு இருக்கலாம் என்று பொலீசார் சந்தேகிக்கிறார்கள். (2-6)

# இந்திய பாதுகாப்பு செயலர்

# எம்.கே. நாராயணன் பதவி மாற்றம் மாநிலம் ஒன்றின் ஆளுநராக நியமனம்



இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் அப் பதவியிலிருந்து திடீரென மாற்றப்பட்டு மாநிலம் ஒன்றின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் கடந்த வியாழனும் வெள்ளியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு எம்.பி.க்கள் குழு புதுடில்லியில் தங்கியிருந்து இந்திய மத்திய அரசின் உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய சமயம் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனையும் அவர்கள் சந்திப்பதாக அவர்களுக்கான நிகழ்ச்சி நிரலில் அடங்கியிருந்தது.

எனினும் நாராயணன் ஓரிருதினங்களில் அப்பதவியிலிருந்து மாற்றப்படும் நிலைமை இருந்ததன் காரணமாக அவருடனான கூட்டமைப்பினரின் சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டது என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் எம்.கே நாராயணனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு முன்னாள் வெளிவிவகார செயலாளர்களான சியாம் சரண், சிவ்சங்கர் மேனன் ஆகிய இருவரில் ஒருவரே பெரும்பாலும் நியமிக்கப்படுவர் என்று கூறப்படுகிறது.

கடந்த 2008 நவம்பர் 26ஆம் திகதி மும்பாய் மீது நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல்களை அடுத்து அச்சமயம் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே.நாராயணன் தமது பதவியை துறக்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)




# தொழில் போட்டி காரணமாக பிஜி தீவில் 2 தமிழர்கள் கொலை


தொழில் போட்டி காரணமாக பிஜி தீவில் 2 தமிழர்கள் வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளனர். இவரது கொலைக்கு காரணமான தமிழர் உட்பட இந்தியர்கள் 3 பேரை பொலிசார் கைது செய்தனர்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டியை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் (36) . இவர் சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள வீனஸ் காலனியில் வசித்து வந்தார். இவரும் முகப்பேரில் வசித்து வந்த ராஜமாணிக்கமும் இணைந்து பிஜி தீவில் ஏற்றுமதி தொழில் செய்து வந்தனர். அங்குள்ள நபூவா என்னும் பகுதியில் புளு வேவ்ஸ் என்ற நிறுவனத்துடன் இணைந்து தொழில் நடத்தினர். இங்கு தமிழ் நாட்டை பூர்வீகமாக கொண்டு பிஜி தீவில் நிரந்தர குடியுரிமை பெற்ற ரவி என்பவர் முகாமையாளராக இருந்து வருகிறார்.

இந்நிலையில் வழக்கமாக சென்னையில் உள்ள குடும்பத்தினருடன் அவ்வப்போது தொடர்பு கொள்ளும் இருவரும் திடீரென அதாவது கடந்த டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் தொடர்பு கொள்ளவில்லை. இதனால் ராமகிருஷ்ணன் குடும்பத்தினர் மத்திய அமைச்சர்கள் ஜி.கே வாசன், மு.க. அழகிரி, எஸ் எம். கிருஷ்ணா ஆகியோரிடமும் முறையிட்டனர். இதனையடுத்து அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விசாரிக்குமாறு உத்தரவிட்டனர்.

ராமகிருஷ்ணனின் தம்பி லட்சுமி நாராயணன் பிஜி தீவுக்கு சென்று அங்குள்ள தூதரக அதிகாரிகளின் உதவியுடன் பொலிசாரிடம் புகார் அளித்தனர். இதனையடுத்து விசாரித்த பொலிசார் காணாமல் போன இருவரையும் தேடினார் .இருவரும் இவரது வீட்டுக்கு அருகே உள்ள விவசாய நிலத்தில் பிணமாக கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது. உடல்கள் வெட்டப்பட்டு சூட்கேசில் அடைக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து விசாரித்த பொலிசார் மனேஜர் ரவி மற்றும் கூட்டாளிகள் இணைந்து கொலை செய்திருக்கலாம் என்ற கோணத்தில் இவருடன் நசீம் பிரகாஷ் ஆகிய 3 பேரை கைது செய்துள்ளனர். மேலும் மாத்யூஸ், முனா, அஜய் ஆகிய 3 பேரை தேடி வருகின்றனர். பணம் கேட்டு மிரட்டி தராத பட்சத்தில் இவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. (2-6)

# அமிதாப்பச்சன் சினிமாவிலிருந்து ஓய்வு அரசியலில் குதிக்க திட்டம்?



இந்தி சுப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் சினிமாவில் இருந்து ஓய்வு பெறதிட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர் 1969இல் திரையுலகில் அறிமுகமானார். நூற்றுக்கணக்கான படங்களில் நடித்தார். தற்போதைய இளைய தலைமுறை நடிகர்களுடனும் இணைந்து நடித்து வருகிறார். சமீபத்தில் வெளியான 'பா' படத்தில் சிறுவனாக நடித்து திரும்பி பார்க்க வைத்தார்.

இதற்காக பாராட்டுகளும், பரிசுகளும் குவிகின்றன. தற்போது நடித்து வரும் 'ராண்' என்ற படம் ஜனவரி 29 அன்றும் 'டீன் பட்டி' பெப்ரவரி 26ஆம் திகதியும் ரிலீசாகின்றன. 'ஷ' பைட் என்ற படத்திலும நடித்து வருகிறார்.

மும்பையில் சமீபத்தில் நடந்த சினிமா படவிழாவில் அமிதாப்பச்சனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. அவ்விழாவில் பேசிய அமிதாப், அபிஷேக் பச்சனுக்கு நீண்ட தூரம் போக வேண்டி உள்ளது. விரைவில் ஓய்வு பெற போவதாக சூசக தகவல் வெளியிட்டார். எனது எல்லைக் கோடு முடிந்துவிட்டதாக உணர்கிறேன் என்றார்.

எனவே அமிதாப்பச்சன் சினிமாவுக்கு முழுக்கு போட்டு முழு நேர அரசியலில் ஈடுபட முடிவு செய்திருப்பதாக இந்தி பட உலகினர் கிசுகிசுக்கின்றனர்.

ஏற்கனவே 1984இல் ஒரு முறை சினிமாவுக்கு முழுக்கு போட்டு அரசியலில் நுழைந்தார். அலகாபாத் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வென்றார். 1988இல் மீண்டும் சினிமாவுக்கு வந்தார். (2-6)

# ஜோதி பாசுவின் பூதவுடல் அரசு மருத்துவமனைக்கு தானம்

இந்திய அரசியல் வரலாற்றில் தனக்கென்று தனியிடம் பெற்ற முதுபெதும் மார்க்சிஸ்ட் தலைவர் ஜோதி பாசு (96) கொல்கத்தா மருத்துவமனையில் ஞாயிறு காலை காலமானார்.

மக்கள் கலங்கிய கண்களும் தளர்ந்த நடையுமாக தங்களை வழிநடத்திய தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த விரைந்தனர்.



நகரெங்கும் கட்சிக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. கடைகளும் வர்த்தக நிறுவனங்களும் மூடியிருந்தன. திரை அரங்குகள் செயற்படவில்லை.

மறைந்த தலைவர் ஜோதி பாசுவின் உடல் அவரது விருப்பப்படி கொல்கத்தாவில் உள்ள எஸ்.எஸ்.கே.எம். அரசு மருத்துவமனைக்கு தானம் செய்யப்படுகிறது.

இந்தத் தகவலை மேற்கு வங்க மார்க்சிஸ்ட் மாநிலக் குழு உறுப்பினர் ராபின் தேவ் கூறினார். ஜோதி பாசுவின் மாநில சட்டப் பேரவை வளாகத்தில் இன்று காலை 10.30 மணியில் இருந்து பிற்பகல் 2.30 மணி வரை தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

பின்னர் மாலை 3 மணிக்கு கொல்கத்தா அலிமுதீன் தெருவில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்படும். ஒரு மணி நேரத்திற்குப் பின் அங்கிருந்து உடலை தானம் செய்வதற்காக எஸ்.எஸ்.கே.எம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று அங்கு டாக்டர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கதேச பிரதம ஷேக் ஹசினா உட்பட வெளிநாட்டு தலைவர்கள் அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளதாக தெரிகிறது. (2-6)

# கர்ப்பிணிகளை மிரட்டும் நீரிழிவு நோய்

சர்க்கரை நோய் என்று அழைக்கப்படும் நீரிழிவுநோய் சனத்தொகை அதிகம் கொண்ட நாடுகளுக்கு பெரும் சவாலாக இருந்து வருகின்றது. இதேபோல் வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் சனத்தொகை அதிகமுள்ள வளர்ந்து வருகின்ற மற்றும் பின்தங்கிய நாடுகளில்தான் இந்த நோய் பாதிப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. நீரிழிவு நோய் ஒருவருக்கு ஏற்பட அவரது உணவு பழக்கவழக்கம் மட்டுமின்றி, மரபுவழிக் காரணிகளும் காரணமாக இருக்கிறது. இந்நிலையில் கருவுற்ற பெண்களுக்கு ஏற்படும் நீரிழிவு நோய்ப் பாதிப்பு, அந்தப் பெண்ணின் வயிற்றில் வளரும் குழந்தை மூலம் மரபு வழியாகப் பரவலாம் என்பது பல ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



அதாவது கருவுற்ற தாய்மார்களுக்கு கர்ப்ப காலத்தில் இயற்கையிலேயே சுரக்கும் சில ஒமோன்கள் அவர்களின் இரத்தத்தில் இருக்கும் சர்க்கரையின் அளவை அதிகப்படுத்தி விடுகிறது. அதற்கு ஈடுகொடுக்கும் விதமாக கருவுற்ற தாய்மார்களின் கணையமும் கூடுதலாக இன்சுலினை சுரந்து இந்த அதிகப்படியான சர்க்கரையை இரத்தத்தில் கரைத்துவிடுகிறது. இது இயற்கையான ஒன்று.

ஆனால் ஒருசில பெண்களுக்கு அவர்களின் கணையம் இந்த கூடுதலாகத் தேவைப்படும் சர்க்கரையை சுரப்பதில்லை. இதனால் அவர்களின் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரித்து அவர்களுக்கு நீரிழிவு நோய் உண்டாகிறது. இதுவே கர்ப்பகால நீரிழிவு நோய் என்று அழைக்கப்படுகிறது. மேற்கத்தேய நாடுகளைச் சேர்ந்த பெண்களோடு ஒப்பிடும்போது ஆசிய நாடுகளைச் சேர்ந்த பெண்களுக்கு கர்ப்பகால நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியக்கூறுகள் 11 சதவீதம் அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மரபணுக்கூறுகள் மற்றும் குறைந்து வரும் உடல் உழைப்பு ஆகிய இரண்டு காரணிகள் கர்ப்ப கால நீரிழிவைத் துண்டுவதாக வும் அந்த ஆய்வுகள் கூறுகின்றன. ஒரு பெண்ணுக்கு கர்ப்பகாலத்தில் ஏற்பட்ட இந்த நோய், அவளது வயிற்றில் வளரும் குழந்தையையும் பாதிக்குமா? என்று கேட்டால் அதற்கும் ஆம் என்று பதிலளிக் கிறார்கள் ஆய்வாளர்கள். அது பற்றி அவர்கள் மேலும் கூறியதாவது,

இந்தக் கர்ப்பகால நீரிழிவு நோய் காரணமாக தாயின் இரத்தத்தில் இருக்கும் அதிகப்படியான சர்க்கரை கருவில் இருக்கும் குழந்தைக்கு தொப்புள்கொடி வழியாக சென்று குழந்தையின் கணையத்தையும் தூண்டி இன்சுலினை சுரக்கச் செய்கிறது.

# பாலின் மகத்துவம்



பூமியில் வசிக்கும் மானுடர்களுக்கு அமுதம் கிடைக்க வாய்ப்பில்லை. அதற்குப் பதிலாக அவர்களுக்கு வாய்த்திருப்பது பால்! என்கின்றன வேதங்கள். இதில் இருந்தே பாலின் மகத்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.

பாலில் தாய்ப்பால், பசுப்பால், எருமைப்பால், ஆட்டுப்பால் என சில வகைகள் உண்டு. ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குணம் உள்ளது. தாய்ப்பால் என்பது ஒவ்வொரு குழந்தைக்கும், தாயிடமிருந்து கிடைக்கும் முதல் மற்றும் ஈடு இணையற்ற உணவாகும்.

அடுத்து பசும்பால் என்பது இயல்பாகவே இனிப்பானது. உடலுக்கு குளிர்ச்சி தருவது. ஆனால் எளிதில் ஜீரணமாகாது. எருமைப்பால் அதிகக் கொழுப்பு நிறைந்தது. உடலுக்கு நல்லது. எருமைப்பால் பசுப்பாலை விடக் குளிர்ச்சியானது. அதிக கொழுப்புச் சத்து கொண்டது. பசி அதிகம் எடுப்பவர்கள் இதைச் சாப்பிடலாம். இதுவும் செரிக்கத் தாமதமாகும். செரிமானக் கோளாறு உள்ளவர்கள் இதைத் தவிர்ப்பது நல்லது.

ஆட்டுப பாலில மனித உடலுக்குத் தேவையான நிறைய சத்துக்கள் உள்ளன. ஆட்டுப்பால் விரைவாகச் செரிமானம் ஆகும். பாலூட்டும் தாய்மார்கள் இதைச் சாப்பிட்டால் அதிக பால் சுரக்கும். இருமல், மூச்சுத் திணறல் போன்ற சுவாசப் பிரச்சினைகளுக்கு ஆட்டுப் பால் நல்லது. வயிற்றுப்போக்கு உள்ளவர்கள் பசுப்பால் சாப்பிட்டால், பேதி அதிகமாகப் போகும். ஆனால் ஆட்டுப்பால் அதை உடனே கட்டுப்படுத்தும்.

பால் குடித்ததும் புத்துணர்வு தரக்கூடியது. பசுப்பால் குடித்து வந்தால் உடல் பலம், மூளைப் பலம் இரண்டடையும் பெறலாம். சோர்வாக இருப்பவர்களுக்கும் தலைச்சுற்றல் உள்ளவர்களுக்கும், மலச்சிக்கல், நீர்ச்சுருக்கு போன்றவற்றால் அவதிப்படுகிறவர்களுக்கும், இரத்தக் கசிவு நோய் உள்ளவர்களுக்கும் பசுப் பால் மா மருந்தாக உள்ளது. தூக்கம் வராமல் தவிப்பவர்களுக்குப் பால் நல்ல தூக்க மருந்து. ஆசிய நாடுகளில் அரிசி பிரதான உணவு. அமெரிக்காவில் கோதுமை முக்கிய உணவு. ஆனால் உலகம் முழுமைக்குமான பொதுவான உணவு பால் மட்டுமே. பிறந்த குழந்தை முதல் மரணப்படுக்கையில் கிடக்கும் முதியவர் வரை எல்லோருக்கும் ஏற்ற உணவாக பால் உள்ளது.

# மாதுளம்பழம் சாப்பிட்டால் மார்பக புற்றுநோய் வராது



மாதுளம்பழத்தில் இயற்கையாகவே பைட்டோ கெமிக்கல் உள்ளது ஆய்வில் தெரியவந்துள்ளது. எல்லஜிக் அமிலம் என்று அழைக்கப்படும் இது புற்றுநோய் செல்கள் வளர்வதைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

மாதுளம் பழத்தில் உள்ள பைட்டோ கெமிக்கல் ஆஸ்ட்ரோஜென் எனப்படும் ஒமோனைக் கட்டுப்படுத்துகிறது. இத னால் மார்பக புற்றுநோய்க்கு காரணமான செல்கள் மற்றும் கட்டி வளர்வது தடுக்கப்புடுகிறது என கலிபோர்னியாவின் டாரேட்டில் உள்ள சிட்டி ஆப் ஹோப் மார்பக புற்று நோய் ஆராய்ச்சி திட்டத்தின் இணைத் தலைவர் ஷியுவான் சென் தெரிவித்துள்ளார்.

மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு மாதுளம் பழம் கொடுத்து ஆய்வு செய்யப் பட்டது. புற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்கான அமிலம் இருப் பது தெரியவந்துள் ளது. மாதுளையில் மருத்துவ குணங்கள் அதிகம்.

எனினும் இது ஆய்வக முடிவுதான். நிஜமாக இது சாத்தியமா என்பதை உறுதியாகக் கூற இயலாது என ஓஹியோ ஸ்டேட்யுனிவர்சிட்டி பின் இன்டர்னல் மெடிசின் துறை பேராசிரியர் கேரி ஸ்டோனர் கூறினார்.

மாதுளம்பழம் சாப்பிடுபவர்களுக்கு மார்பக புற்றுநோய் வருவதற்கான வாய்ப் புக் குறைவு என ஆய்வில் தெரியவந்துள் ளது. அமெரிக்க புற்று நோய் ஆராய்ச்சியாளர் சங்கத்தின் கேன்சர் பிரிவென்சன் ரிசேர்ச் பத்திரிகையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அண்மைக் காலமாக மார்பக புற்று நோயால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆஸ்ட்ரோஜென் எனப்படும் ஒமோன் காரணமாகவே 4இல் 3 பெண்களுக்குப் புற்று நோய் ஏற்படலாம் எனக் கணிக்கப்பட்டுள் ளது.

இந்நிலையில் ஒமோன் காரணமாக ஏற்படும் புற்றுநோயிலிருந்து தப்பிக்க மாதுளம்பழம் சாப்பிடலாம் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.




# அதிக அளவு நொறுக்குத் தீனியால் மன அழுத்தம் ஏற்படுகின்றது

வேலைப் பளு, பிரச்சினை ஒரு பக்கம் இருந்தாலும் அதிக அளவில் நொறுக்குத் தீனி சாப்பிடுவதும் மன அழுத்தம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமையும் என ஒரு ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

உணவுப் பழக்கத்துக்கும் மனநிலைக்கும் உள்ள தொடர்பு குறித்து இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் அறிவியல் அறிஞர்கள் ஒரு ஆய்வை மேற்கொண்டனர். சராசரியாக 55 வயதுள்ள லண்டனில் பணிபுரியும் 3 ஆயிரத்து 486 ஆண்கள் மற்றும் பெண்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தினமும் நொறுக்குத் தீனியை உட்கொள்வது குறித்து அவர்களிடம் கேள்விகள் கேட்கப் பட்டன. ஒரு முறைகூட உட்கொள்ள வில்லை என்பது முதல் 6 முறை உட்கொள்வது வரை வெவ்வேறு பதில்களைத் தெரிவித்திருந்தனர்.

அவர்களில் பழங்கள், காய்கறிகள் மற்றும் மீன் உள்ளிட்ட இயற்கை உணவு வகைகள் சாப்பிடுபவர்கள் மற்றும் சொக்லெட், பதப் படுத்தப்பட்ட உணவு, பதப்படுத்தப்பட்ட இறைச்சி, அதிக கொழும்புச் சத்துள்ள பால் பொருட்கள் என நொறுக்குத் தீனி சாப்பிடு பவர்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்ட னர்.

ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் அவர்களை அழைத்து மன அழுத்த அளவு குறித்து கேள்விகள் கேட்கப்பட்டன. பாலினம், வயது அடிப்படையில் ஆய்வு செய்தபோது அதிகமாக நொறுக்குத் தீனி சாப்பிட்டவர்கள் மன அழுத்தத்தால் அதிக அளவில் பாதிக்கப்பட்டிருப் பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதேசமயம் இயற்கை உணவு சாப்பிட்டவர்கள் குறைவான அளவே பாதிக்கப்பட்டிருந்தனர். எனவே உணவுப் பழக்கவழக்கத்துக் கும் மன அழுத்தத்துக்கும் நேரடி தொடர்பு இருப்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் நொறுக்கு தீனி அதிகம் சாப்பிடுபவர்கள் உடலுக்கு கேடுவிளைவிக்கும் புகை பிடிப்பதை கைவிட்டால் கூட மன அழுத்தத்திலிருந்து விடுபட முடியவில்லை என ஆய்வின் தலைவர் தஸ்னிம் அக்பரலி தெரிவித்துள்ளார்.

# நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள...

பொதுவாக நினைவாற்றல் என்பது அனைவருக்கும் மாபெரும் தேவை. நினைவாற்றல் சுமாராக இருப்பவர்கள்கூட நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள மூன்று முக்கியமான வழிமுறைகளைக் கடைப் பிடிக்கவேண்டும்.

கவனமான பார்வை

ஆர்வம். அக்கறை

புதிதாகச் சிந்தித்தல்

இந்த மூன்றிற்குமே சிறப்பான பயிற்சி தேவை. அந்தப் பயிற்சிக்காக எந்தப் பயிற்சிக் கூடத்திற்கும் செல்ல வேண்டியதில்லை. நமக்கு நாமே பயிற்சி அளித்துக் கொள்ளலாம். அதற்கான சில பயிற்சி முறைகளைப் பார்ப்போம். முதலாவதாக ஒரு பயிற்சி.

ஒன்றிலிருந்து நூறு வரை எண்ணுங்கள். பிறகு 2, 4, 6 என்று இரண்டு இரண்டாக எண்ணுங்கள். பிறகு 100 இலிருந்து தலைகீழாக 100, 98, 96 என்று இரண்டு இரண்டாகக் குறைத்து எண்ணுங் கள். பிறகு நான்கு நான்காகக் குறையுங் கள். இப்படியே 5,6,7 வரை தாவித் தாவி குறைத்து எண்ணுங்கள் இப்படி ஏழு ஏழாகக் குறைத்து எண்ணக்கற்றுக்கொண் டீர்கள் என்றால் உங்களுடைய நினைவுத் திறன் நல்ல அளவில் வளர்ந்திருக்கிறது என்று அர்த்தம்.

இப்போது ஓர் ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஒரு பந்தியில் 'எஸ்' எழுத்தையெல்லாம் எண் ணிக் குறித்துக் கொள்ளுங்கள். அடுத்து இரண்டு மூன்று பந்திகளில் உள்ள ஏ எழுத்தையெல்லாம் எண்ணிக் குறித்துக் கொள்ளுங் கள். இப்போது மீண்டும் ஒரு முறை திருப்பிப் பார்த்தீர்கள் என்றால் எத்தனை எஸ் அல்லது ஏனைய எண்ணாமல் விட்டிருப்பீர் கள் என்று தெரியவரும். அதை வைத்து உங்கள் நினைவுத் திறனின் அளவை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.


புதிய சிந்தனை மூலமும் நினைவுத் திறனை வெகுவாக வளர்த்துக்கொள்ள லாம்.

தொலைக்காட்சியில் வரும் விளம்பரங் களைப் பாருங்கள். அந்த விளம்பரம் பற்றிக் கொஞ்சம் ஆராய்ச்சி செய்யுங்கள். வேறு எந்த மாதிரி இந்த விளம்பரம் இருந்திருந் தால் இதைவிட நன்றாக இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். சிந்திக்கச் சிந்திக்க மூளையின் சிந்திக்கும் ஆற்றல் வளர்வதோடு நினைவாற்றலும் பெருகும். முயன்று பாருங்கள்.

இதேபோன்று இன்னொரு பயிற்சி. உங்கள் நெற்றியை கற்பனையாக நீங்களே 6 அறைகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒரு அறையை இழுங்கள். அதில் மறுநாள் 9 மணி நிகழ்ச்சி என்று எழுதிப் போடுங்கள். (உதாரணமாக 9 மணிக்கு ராம் கோபாலை சந்திக்க வேண்டும் என்று கற்பனையாக எழுதிப் போடுங்கள்) பிறகு அந்த அறையை இழுத்து மூடுங்கள்.

இதேபோன்று இரண்டாவது அறையைத் திறந்து இன்னொரு நிகழ்ச்சி எழுதிப் போடுங்கள். அதேபோன்று அடுத்தடுத்த நான்கு அறைகளுக்கும் இப்படிச் செய்துவிட் டால் இரவு படுக்கையில் படுத்ததும் உங் களுக்கே ஆச்சரியமாக இருக்கும். இந்த 6 நிகழ்ச்சிகளும் அடுத்தடுத்து உங்களை அறியாமலே உங்கள் மனதில் தோன்றும். இன்னும் இதேபோன்று நீங்கள் கூட புதிய புதிய முறைகளைக் கையாண்டு உங்கள் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளலாம்.

புத்தகங்களைப் படிப்பது, காலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருந்து அன் றைய நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவது, அப்பி யாசங்கள் செய்வது இதனாலெல்லாம்கூட



உங்கள் சிந்திக்கும் திறனையும், நினைவுத் திறனையும் வளர்த்துக் கொண்டே போகலாம்.

உடலில் ஒவ்வொரு உறுப்பும் ஓர் இயந்திரம். அதிலும் இதயமும், மூளையும், ஓய்வில்லாத இயந்திரங்கள். இதயம் ஓய்வு எடுத்துக் கொண்டால் வாழ்க்கை நின்று விடும். மூளைக்கு ஓய்வு கொடுத்தால் அது துருப்பிடித்துப்போய் ஒன்றுக்கும் பயனற்று வாழ்க்கை முன்னேற்றம் நின்றுபோய் விடும்.

ஆகையால் எந்தநேரமும் மூளைக்கு ஏதேனும் வேலை கொர்டுத்துக் கொண்டே இருங்கள். நினைவாற்றாலை மேம்படுத் துங்கள். நினைத்ததைச் சாதியுங்கள்.

# தை மாதப் பலன்கள்

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம், 1ஆம் பாதம்**

**அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லி எடுத்த காரியங்களை வெற்றி பெற வைக்கும் தனுசு ராசி நேயர்களே!**

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, நான்கு கிரகங்கள் உங்கள் ராசியிலேயே சஞ்சரித்துக் கூட்டுக்கிரக யோகத்தை உருவாக்குகின்றார்கள். அதே நேரத்தில் ராசிநாதன் குரு சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.

எனவே, கூட்டாளிகளால் நன்மை கிடைக்கும். கூடுதல் பொறுப்புக்கள் உங்களுக்கு வந்து சேரும். ஆற்றல் மிக்க நீங்கள், ஆதரவுக்கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை குறைகிறதே என்று கவலைப்பட்ட நிலை இனி மாறும்.

உங்களுக்கு உறவினர்களும், நண்பர்களும் கைகொடுத்து உதவ முன்வரும் மாதமிது. விரயாதிபதி நீசம் பெறுவதால் விரயங்கள் குறையும். விரும்பிய அளவிற்கு சேமிப்புக்கள் உயரும். தனாதிபதி சனியும் நீசம் பெறுகிறார். எனவே சனீஸ்வர வழிபாட்டை நீங்கள் முறையாக மேற்கொண்டால் தன வரவிலும் தடை ஏற்படாது. பணப் பொறுப்புக்கள் சொல்வதிலும் சிக்கல்கள் உருவாகாது.

5இற்கு அதிபதி செவ்வாய் வக்ரம் பெறுவதால் பிள்ளைகளால் பிரச்சினைகள் உருவாகலாம். குழந்தைகளின் நலன் கருதி பெரும் தொகையொன்றைச் செலவிடுவீர்கள். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். இலாப நோக்கத்தோடு பழகியவர்கள் உங்களை விட்டு விலகுவர்.

எதிர்பார்ப்புகள் நிறைவேற நீங்கள் எதிரில் இருப்பவர்களையும் அருகில் இருப்பவர்களையும் அனுசரித்துச் செல்வது நல்லது. கட்டிடம் கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

ஜனவரி 15ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வும் ஊதிய உயர்வும் இப்பொழுது கிடைக்கும்.

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வருவீர்கள். ஆடை, ஆபரணங்களை வாங்குவதில் ஆர்வம் கூடும். வெளிநாட்டு முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். தொழில் மாற்றச் சிந்தனைகளை சில மாதங்கள் தள்ளி வைப்பது நல்லது.

பெப்ரவரி 2ஆம் திகதி மகர ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வாழ்க்கைத் துணையால் வந்த பிரச்சினைகள் மாறும். வருமானம் திருப்தி தரும். விவாகம் சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

பெப்ரவரி 7ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். 6இற்கு அதிபதி 3இல் சஞ்சரிக்கும் பொழுது கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வருமானம் போதுமானதாக வந்து சேரும். இழப்புக்களை ஈடுசெய்ய இணைந்திருக்கும் நண்பர்கள் ஒத்துழைப்பு செய்வர். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். இந்த நேரத்தில் ஏனைய வருமானங்களும் பெருகும். குரு, சுக்ர சேர்க்கையால் திடீர் மாற்றங்களும், யோகங்களும் வந்து சேரும்.

இம்மாதம் குருதட்சிணாமூர்த்தியை வழிபட்டு குதூகலம் நிறைந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

## மகரம்

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம் வரை**

**மற்றவர்கள் போற்றும் அளவிற்கு மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று விரும்பும் மகர ராசி நேயர்களே!**

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சனி வக்ரம் பெறுகிறார்.

இராசியைப் பார்க்கும் செவ்வாயும் வக்ரமாக இருக்கிறார். சுக இலாபாதிபதியான செவ்வாய் வக்ரம் பெறுவதால், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். அஷ்டமாதிபதி இராசியிலேயே சஞ் சரிப்பதால் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால்தான் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும்.

விரய ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் சஞ்சரிப்பதால் குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கி மகிழும் சூழ்நிலை உருவாகும். தாய் ஸ்தானாதிபதி செவ்வாய் வக்ரம் பெறுவதால் தாயின் உடல்நலம் கருதி செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

விரயாதிபதி குரு தனஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் விரயத்திற்கேற்ற வரவு வந்து கொண்டே இருக்கும். குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. செவ்வாய், சனி வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் செல்வ நிலை உயரும்.

மகரத்தில் சுக்ரன் சஞ்சரிப்பது யோகம் தான். 5,10இற்கு அதிபதியான சுக்ரன் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகள் வழியில் ஏனைய வருமானங்கள் பெருகும். குழந்தைகளின் நலன் கருதி வேலை, தொழில் என்று எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பஞ்சாயத்துக்கள் நல்ல முடி விற்கு வரும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுது ஒரு முறை யோசித்துச் செய்வது நல்லது.

காரணம் இராசிநாதன் வக்ர கதியில் இயங்குகிறார். கூட்டு முயற்சி களில் கிடைக்கும் இலாபத்தை உடனுக்குடன் பகிர்ந்து கொள்வது நல்லது.

பெப்ரவரி 2ஆம் திகதி உங்கள் இராசிக்கு 6, 9 இற்கு அதிபதியான புதன் இராசியிலேயே உலாவரும் பொழுது உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் பாதகம் செய்தவர்கள் இனி சாதகம் செய்யத் தொடங்குவர்.

அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள். கல்யாணம், காதுகுத்து, கடை திறப்பு விழா என்று விரயங்கள் வந்து கொண்டேயிருக்கும். இருந்தாலும் கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

### சிவல்புரி சிங்காரம்

பெப்ரவரி 7ஆம் திகதி கும்ப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது யோகம் தான். எனவே மாதக் கடைசி மகிழ்ச்சியாக இருக்கும். மனதிற்குப் பிடித்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவர். செல்வாக்கு அதிகரிக்கும். வருங்காலத்தைப் பற்றிய பயம் நீங்கும். சுக்ர வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் சுகங்களும் சந்தோஷங்களும் எதிர்பார்த்த படியே வந்து சேரும்.

சிவன் வழிபாடு இம்மாதம் சிறப்பினை வழங்கும்.

(தொடரும்)

# மீள ஒப்படைக்காத தற்காலிக அடையாள அட்டைகளை ஜனாதிபதி தேர்தலில் பயன்படுத்த முடியும்

## தேர்தல்கள் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்)

மாகாண சபைத் தேர்தல்களுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளை மீள வழங்காது வைத்திருக்கும் வாக்காளர்கள் அவற்றை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் பயன்படுத்த முடியும் எனத் தேர்தல்கள் தலைமையகம் அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தலைமையில் நடந்த கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு முதல் மாகாண சபைத் தேர்தல்களுக்காகத் தேர்தல்கள் தலைமையகம் தற்காலிக அடையாள அட்டைகளை வாக்காளர்களுக்கு விநியோகித்தது. எனினும் அந்த அடையாள அட்டைகளைத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளிடம் மீள ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான வாக்காளர்கள் அந்தத் தற்காலிக அட்டைகளை மீள ஒப்படைக்காது தம்மிடமே வைத்துள்ளனர்.

இந்நிலையில் கிழக்கு மாகாணத்தைத் தவிர்ந்த வாக்காளர்கள் மீள ஒப்படைக்காமல் வைத்திருக்கும் தற்காலிக அடையாள அட்டைகளை இந்த ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்த தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலதிக ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் ஆகியோர் பங்குபற்றிய கூட்டத்தில் தேர்தல்கள் ஆணையாளர் இந்த முடிவை அறிவித்ததாக மேலதிக ஆணையாளர் டபிள்யூ.பீ. சுமணசிறி தெரிவித்தார்.

மேலும் தேர்தல்கள் தலைமையகம் விநியோகிக்கும் தற்காலிக அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும் கால அவகாசம் கடந்த 15 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

எனினும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் வழங்கும் தற்காலிக அட்டைகளைப் பெறுவதற்கு எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும் என்றும் மேலதிக ஆணையாளர் சுமணசிறி தெரிவித்தார்.

தற்போது தேர்தல்கள் தலைமையகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதால் ஜனாதிபதித் தேர்தலில் அடையாள அட்டையின்றி வாக்களிக்க முடியாது என எந்த வாக்காளரும் ஆதங்கப்பட வேண்டியதில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக தேசிய அடையாள அட்டையைத் தம்முடன் கொண்டு செல்ல வேண்டும். அது இல்லாதவர்கள் காலாவதியாகாத கடவுச்சீட்டு, காலாவதியாகாத சாரதி அனுமதிப்பத்திரம், ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆட்பதிவுத் திணைக்களம் வழங்கும் மதகுருமார்களுக்கான அடையாள அட்டை தற்காலிக அடையாள அட்டை அல்லது தேர்தல்கள் தலைமையகம் வழங்கும் தற்காலிக அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதாவதொன்றைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியும் என்றும் தேர்தல்கள் தலைமையகம் அறிவித்துள்ளது. (2-6)

## துரித கணிதச் செய்கை செயலமர்வு

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கைசன் (KAIZEN) பிரிவினால் திட்டமிடப்பட்ட ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான துரித கணிதச் செய்கை (IMaCS) செயலமர்வு நேற்று யாழ்.வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது. தொடர்ந்து இன்றும் யாழ். வலய இரண்டாம் இலக்கு பாடசாலைகளுக்கும் வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த இலக்குப் பாடசாலைகளுக்கும் நடைபெறும்.

நாளையும் நாளை மறுதினமும் தீவகம், வடமராட்சி மற்றும் தென்மராட்சி வலய இலக்குப் பாடசாலைகளுக்கும் நடைபெறும் .உரிய உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இணைப்பாளர் இ.இராஜேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

# கப்பலில் உள்ள இலங்கை அகதிகள் பலவந்தமாக தரையிறக்கப்படமாட்டார்கள்

## இந்தோனேஷிய அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தோனேஷியாவில் கப்பலில் உள்ள இலங்கை அகதிகள் பலவந்தமாக தரையிறக்கப்பட்டால் 10 வருடங்களுக்கு மேலாக சிறைகளில் தடுத்துவைக்கப்படலாம் என அவுஸ்திரேலியாவில் இருந்து செயற்படும் இணையத்தளம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

கப்பலில் உள்ள அகதிகள் அனைவரையும் இந்தவாரம் பலவந்தமாக தரையிறக்க இந்தோனேஷிய அதிகாரிகள் முற்படக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தத் தகவலை இந்தோனேஷிய அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

அதற்கமைய அகதிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்கள் மாத்திரமே இலங்கைக்கு நாடு கடத்தப்படுவார்கள் எனவும் இவர்களை நாடு கடத்துவதை விட வேறு வழிகள் எதுவுமில்லை. எனினும் அவர்களுக்கு சிறப்பான ஒரு அரசியல் தீர்வினை பெற்றுக்கொடுக்க தாம் முயன்று வருவதாகவும் இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறினார்.

குறிப்பிட்ட அகதிகள் சட்டவிரோதமான முறையில் இந்தோனேஷியா ஊடாக அவுஸ்திரேலியாவுக்குள் செல்லமுயன்ற வேளையில் இந்தோனேஷியாவில் கப்பலுடன் தடுத்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

புரிந்து கொள்ளாத போதும், பொறாமைப் படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாக கருதிவிடுகின்றான். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வாக்களிக்கும் முறையை தெளிவுபடுத்த வேண்டும்!

காலத்திற்கு காலம் மாற்றம் அடையும் வாக்களிப்பு முறைகள் ஜனநாயகத்தின் இயல்புக்குப் பங்கமாக அமைந்து விடுகின்றன.

வாக்களிப்பு முறைகள் இலகுவானதாகவும் பாமர மக்கள் எளிதில் விளங்கிக் கொண்டு அதனை நடைமுறை படுத்துக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் இலங்கையின் தேர்தல் முறைகளும், சட்ட விதிகளும் வாக்களிப்பு முறைகளை மாற்றிவிடுகின்றன. இதனால் செல்லுபடியற்ற வாக்குகள் அதிகரிப்பதும், சாமானிய மக்கள் வாக்களிப்பில் இருந்து விலகி நிற்பதுமான துரதிர்ஷ்டம் நீடிக்கின்றது.

தனித்து புள்ளடி இடுதல் என்ற நடை முறைக்குள் பழக்கப்பட்ட வாக்களிப்பு மரபு மாற்றமடையும்போது அது பற்றிய போதிய விளக்கம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஊடகங்கள் மூலம் செய்யப்படும் வாக்களிப்பு முறைமைகள் பற்றிய விளக்கங்கள் எல்லாப் பொதுமக்களையும் சென்றடைவதில்லை.

எல்லா மக்களும் ஊடகங்க்ளை வாசிக்கின்றார்கள், கேட்கின்றார்கள், பார்க்கின்றார்கள் என்ற கருதுகோளின் அடிப்படையில் தேர்தல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் வாக்களிப்பு முறைபற்றிய விளக்கங்கள் போதுமானதல்ல.

எனவே அதற்கு மேலாக வீடுவீடாகச் சென்று அல்லது பொது இடங்களில் மக்களை குழுக்களாகத் திரட்டி அவர்களுக்கு வாக்களிக்கும் முறைபற்றி எடுத்துக்கூற வேண்டிய தேவையுள்ளது.

இதனை தேர்தல் திணைக்களம் செய்வதென்பது நடைமுறைச் சாத்தியமாகாத விடயம்.

ஆகவே இந்தப் பணியை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி அமைப்புகளின் விரிவுரையாளர்களும், மாணவர்களும் ஏற்றுக்கொண்டு செய்வது மிகமிக அவசியமானதாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் களத்தில் இறங்கி, வாக்களிக்கும் முறைப்பற்றி பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதன் மூலம் செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கையை பூச்சியமாக்குதல்–வாக்குரிமை இருக்கும் அனைத்து மக்களையும் வாக்களிப்பதற்கு ஊக்குவித்தல் என்ற இருவகை நன்மைகளைப் பெறமுடியும்.

பலகோடி ரூபாய்களைச் செலவழித்து தேர்தலை நடத்தும் போது, ஐம்பது வீதத்திற்கு குறைவான வாக்காளர்களே வாக்களிப்பார்களாயின், அங்கு ஜனநாயகம் தோற்று விட்டதென்றே பொருள் கொள்ளவேண்டும்.

ஜனநாயகத்தில் மக்களின் உச்சமான பங்களிப்பு என்பது வாக்களிப்பினால் மட்டுமே ஏற்படமுடியும்.

ஆக, தேர்தலில் வாக்களிக்குமாறும் எங்ஙனம் வாக்களிக்க வேண்டும் என்பதையும் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பது ஜனநாயகம் நிலைபேறு அடைவதற்கு நாம் ஆற்றும் பணியாகும்.

இதனை பல்கலைக்கழகங்கள், உயர் கல்விப் பீடங்கள், அரச சார்பற்ற அமைப்புகள் முன்னெடுக்க வேண்டும் என்பது ஜனநாயகப் பற்றோடு இங்கு முன்வைக்கப்படுகின்றது.

# புரட்சித் தலைவர் இன்றிருந்தால் தமிழருக்குப் பின்னடைவு வந்திருக்காது

## கவிஞர் புலமைப்பித்தன்

தமிழக முதல்வர் என்ற இடத்தில் எம். ஜி.ஆர். இருந்திருந்தால் தமிழ் மக்களுக்குப் பின்னடைவு வந்திருக்காது என்று கவிஞர் புலமைப்பித்தன் தெரிவித்துள்ளார். எம். ஜி.ஆரின் பிறந்த நாளான்று கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புரட்சித் தலைவர் என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்றவரும் இலங்கைத் தமிழ் மக்கள் விடுதலைக்கு உந்து சக்தியாக திகழ்ந்த எம். ஜி.ஆர். அவர்கள் இன்று இல்லாமல் போனது தமிழினத்திற்கு எவ்வளவோ பெரிய பேரிழப்பு. மனிதநேயத்தினுடைய மிக உயர்ந்த உன்னதத்தைப் பெற்றவர். பிரபாகரனுடன் நெருக்கமான உறவினைக் கொண்ட எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய வாழ்நாள் முழுக்க தமிழ் மக்களுக்காக செயற்பட்டார்.

இப்படிப்பட்டவரை இழந்து இன்று தவிக்கின்றோம். இந்நிலையில் இலங்கையின் வெற்றி என்பது ஆறு நாடுகள் கூட்டாகச் சேர்ந்து நிகழ்ந்துபோன நிகழ்வு.

இந்தியாவின் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் கடற்படையின் முழுமையான பங்களிப்புக்கள் எல்லாம் இதில் உண்டு. தமிழக முதல்வர் கருணாநிதி தன்னுடைய ஆட்சியினைக் காப்பாற்றுவதற்காக இந்திய அரசினை தாங்கிப்பிடிக்க வேண்டிய நிலைக்கு உள்ளானார்.

இந்திய அரசு இலங்கைக்கு பல்லாயிரம் கோடி பணத்தினை கொடுத்தது; ராடர் கொடுத்தது; என்ன உதவிகள் செய்யவேண்டுமோ அனைத்தையும் கொடுத்து, இலங்கை தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதற்கு பெரும் காரணமாக இருந்தது.

கருணாநிதியின் இடத்தில் புரட்சித் தலைவர் இருந்திருந்தால் இந்திய அரசு உதவி செய்திருக்காது. தமிழ் மக்களுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருக்காது. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவானது தமிழர் போராட்டத்திற்குத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்று கவிஞர் புலமைப்பித்தன் தெரிவித்துள்ளார். (2-6)

# டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஒத்துழைக்காதவர்களுக்கு எதிராக நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்ந்து இருந்து வருகின்றது. டிசம்பர், ஜனவரி மாதங்களில் 15 நோயாளிகள் இந்நோயினால் இறந்துள்ளார்கள். யாழ். மாவட்டம் முழுவதும் டெங்கு நோய் கட்டுப்பாடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை சுத்திகரிப்புப் பணி மூலம் அகற்றுவதே முக்கியமான வினைத்திறன் மிக்க தடுப்பு நடவடிக்கை. இப்பணி ஒவ்வொரு வீடுகளிலும் நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பெரும்பாலானோர் இப்பணியில் ஈடுபட்டிருப்பதை நாம் அவதானிக்க முடிகின்றது. ஆனால் ஒரு சிலர் இதற்கு ஒத்துழைப்பு வழங்காது தொடர்ந்து டெங்கு நோய் பரம்பலுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர். ஒரு குறிக்கப்பட்ட பிரதேசத்தில் பெரும்பாலானோர் தமது வீட்டு வளவுகளை நிறுவனங்களை பொது இடங்களை துப்புரவு செய்தாலும் ஓரிருவர் இப்பணியை செய்யாவிடின் அப்பிரதேசத்தில் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த முடியாது. டெங்கு நோய் பரம்பலை தடுக்க முடியாது. ஒரு சிலர் செய்யும் தவறுகளால் தொடர்ந்து உயிரிழப்புக்கள் ஏற்படுவதை நாம் அனுமதிக்க முடியாது.

கடந்த ஆண்டில் இலங்கையின் சரித்திரத்தில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு டெங்கு நோயின் தாக்கம் ஏற்பட்டது. 33 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்கள் டெங்கு நோயுடன் இனங்காணப்பட்டனர். இலங்கையின் பல பகுதிகளிற்கும் இவ் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்கத் தவறியதனால் சுகாதார அமைச்சு நுளம்புப் பெருக்க தடுப்புச் சட்டத்தை அறிமுகப் படுத்தியது. இச்சட்டத்தின் உதவியுடனேயே பல மாவட்டங்களில் டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது. யாழ். மாவட்டத்திலும் இந்நோயைக் கட்டுப்படுத்த இச்சட்டத்தை நடைமுறைப் படுத்த நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் கொழும்பிலிருந்து வருகை தந்த உயர் மட்டக் குழு வினர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக அறிமுக பயிற்சி நேற்று வழங்கப்பட்டுள்ளது.

11ஆம் இலக்க நுளம்பு பெருக்கச் சட்டத்தின் பிரகாரம் நுளம்பு பெருகும் இடங்களைக் கொண்டிருக்கும் வீட்டுக்காரருக்கு அல்லது நிறுவனத் தலைவருக்கு அவற்றை நிவர்த்தி செய்ய அறிவுரையும் கால அவகாசமும் வழங்கப்படும்.

இக்காலப் பகுதிக்குள் இனங்காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாவிடின் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இச்சட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபாய் வரையான தண்டமும் 6 மாத கால சிறைத்தண்டனையும் வழங்கப்படலாம். டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு சகல பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

**வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்**
பிராந்தியபணிப்பாளர்
சுகாதார சேவைகள் யாழ்ப்பாணம்

# மலையக ம. முன்னணியின் புதிய தலைவி, அங்கத்தவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி சார்பில் காலஞ்சென்ற அமைச்சர் சந்திரசேகரன் அவர்களுக்குப் பதிலாக அதன் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்ற அவரின் பாரியார் திருமதி சாந்தினி சந்திரசேகரன், உப தலைவரான பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன், அங்கத்தவர்களான ஊவா மாகாண சபை உறுப்பினர் அரவிந்தகுமார், செயலாளர் நாயகம் விஜயகுமார் மற்றும் சில கட்சி அங்கத்தவர்கள் சகிதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தனர்.

அங்கு ஜனாதிபதியிடம் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் கட்சித் தலைவியோடு பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் மற்றும் குழுவினர் ஒட்டுமொத்தமாக ஒரு வேண்டுகோளை முன்வைத்தனர். நாடு முழுவதும் சந்தேகத்தின் பேரிலும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் என்ற பேரிலும் ஆயிரக்கணக்கான தமிழ்க் கைதிகளைக் குறிப்பாக மலையக தமிழ்க் கைதிகளை உடனடியாக விடுவிக்கும் படி கேட்டுக்கொண்டார்.

அதாவது சந்தேகத்தின் பேரில் சாட்சியங்கள் இல்லாமல் குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைத்திருப்பவர்களையும் எதுவித காரணமுமின்றி நாடு முழுவதிலும் குறிப்பாக காலி, நுவரெலியா, அநுராதபுரம், கொழும்பு, வெலிக்கடை, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி போன்ற சிறைகளில் தடுத்து வைத்திருக்கும் தமிழ்க் கைதிகளை உடனடியாக விடுவிக்கும் படி ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர்.

அதற்கு ஜனாதிபதி இவர்களின் கோரிக்கையை ஏற்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுத்து உடனடியாக இக்கைதிகளை விடுவிக்க ஆவன செய்வதாக உறுதியளித்தார். இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் உப தலைவரும் பிரதி அமைச்சருமான இராதா கிருஷ்ணன் தெரிவித்தார். (2-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு



சமநிலையிலிருந்து பிறழாதவன் , சாந்தமானவன் , நன்மையை ஆராய்ந்து ஏற்பவன், அமைதி படைத்தவன் , இரக்கமும் , அன்பும் பெரிதும் உள்ளவன் - இத்தகையவன் நல்ல பணிகளில் ஈடுபடுகிறான். அதன் மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக் கொள்கிறான்.

ஒரு பெரிய காரியத்தைச் செய்து முடிப்பதற்கு நீண்ட கால இடையறாத முயற்சி பெரிதும் தேவைப்படுகிறது. இத்தகைய முயற்சியில் ஒரு சிலர் தோல்வியுற்றாலும் அதைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இவ்விதம் பலர் வீழ்ச்சியுறுவதும் , துன்பங்கள் நேருவதும் பெருமளவில் கஷ்டங்கள் உண்டாவதும் இயல்பே ஆகும். மனிதன் தனது சுயநலத்தையும் மற்றுமுள்ள எல்லாப் பேய்களையும் ஆன்மீக ஞானம் என்ற நெருப்பைக் கொண்டு தன்னிடமிருந்து விரட்ட முயற்சி செய்யும் போது அவை அந்த முயற்சியை எதிர்த்துப் போராடுகின்றன.

# தமிழகம் வந்த தமிழர்கள் விரட்டப்பட்டது ஏன் ?

## -பழ.நெடுமாறன்



உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளில் தமிழர்கள் பரவி வாழ்கிறார்கள் . இன்று நேற்றல்ல பல நூற்றாண்டுகளாகத் தமிழர்கள் பல நாடு களில் குடியேறி அந்நாடுகளையே தங்கள் சொந்த நாடுகளாக ஏற்றுக்கொண்டு வாழ்கிறார்கள். அதிலும் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையும் இந்தியாவும் கடலால் பிரிக்கப்படுவதற்கு முற்பட்ட காலத்திற்கு முன்பே இருபுறத்திலும் வாழ்ந்த தமிழர்கள் மொழியாலும் பண்பாட்டாலும் மிக நெருங்கியவர்களாக இருந்தார்கள்.

சங்க காலப் புலவரான ஈழத்து பூதந்தேவனார் காலத்திலிருந்து சென்ற நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் காலம் வரையிலும், அதற்குப் பிறகு இன்று வரையிலும் மட்டுமல்ல, இனி எதிர் காலத்திலும் ஈழத் தமிழர்களுக்கும் தழிழகத் தமிழர்களுக்கும் உள்ள உறவு என்பது தொப்புள் கொடி உறவாகும்.

ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல பிற நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களும் தங்களது பண்பாட்டுத் தாயகமாகக் கருதுவது தமிழ்நாட்டையே ஆகும். தமிழ் நாட்டுக்கும் பிற நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் இடையே உள்ள உறவு என்பது தாய் - சேய் உறவு ஆகும்.

மொழி, பண்பாடு, கலை ஆகியவற்றின் அடிப்படையில் உலகம் எங்கும் நடைபெறும் தமிழ் ஆய்வுகளை ஒருங்கிணைக்கவும் உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தவும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஈழத் தமிழறிஞர் தனிநாயகம் அடிகள், தமிழகத்து அறிஞர்கள் வ.ஐ. சுப்பிரமணியம், சாலை இளந்திரையன் போன்ற பலரின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது.

முதல் உலகத் தமிழராய்ச்சி மாநாடு மலேசியாவில் 1966ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம்திகதி முதல் 23ஆம்திகதி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. உலகெங்கும் உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் இம் மாநாட்டில் பங்குபெற்றனர்.

அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த எம்.பக்தவத்சலம் தலைமையில் இரா.நெடுஞ்செழியன், பி.டி.ராஜன் உட்பட பல கட்சித்தலைவர்கள் தமிழகக் குழுவாகச் சென்று கலந்துகொண்டனர்.

1968 ஆம்ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை சென்னையில் 2ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றபோதும் அனைத்து நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்களும் வேறுபாடு இன்றிக் கலந்துகொண்டனர்.ராஜாஜி, பெரியார், காமராசர், ஜீவா, ம.பொ.சி.போன்ற பல்வேறு கட்சித் தலைவர்களையும் முதலமைச்சராக இருந்த அண்ணா, நேரில் சென்று அழைத்து இம்மாநாட்டில் சிறப்புரையாற்றவைத்தார். அவர்களும் அவருடன் ஒத்துழைத்தனர். அனைவரையும் தமிழர்கள் என்ற உணர்வுடன் அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றிணைந்து உலகத் தமிழர்களின் ஒற்றுமைக்கு வலிமை சேர்த்தனர்.

1970 ஆம் ஆண்டு 3ஆவது மாநாடு பாரிசிலும் 1974 ஆம்ஆண்டு நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்திலும் ஒற்றுமை குலையாத வகையில் நடைபெற்றது. யாழ்ப்பாண மாநாட்டில் சிங்கள இராணுவம் புகுந்து சுட்டு 9 தமிழர்கள் உயிர் துறந்த துயர நிகழ்ச்சியும் நடைபெற்றது.

1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் போது முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர்.விடுத்த அழைப்பை அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஏற்று மாநாட்டில் பங்குகொண்டனர். ஆனால் தி.மு.க.தலைவரான கருணாநிதி மாநாட்டில் கலந்துகொள்வதைத் தவிர்த்தார். அன்றிலிருந்து இந்த ஒற்றுமையைச் சீர்க்குலைக்கும் நடவடிக்கைகள் தொடங்கின.

1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 5ஆம் திகதி வரை தஞ்சாவூரில் நடைபெற்ற 8 ஆவது மாநாட்டின் போது முதலமைச்சர் ஜெயலலிதாவின் அழைப்பை ஏற்று பல கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

அதிலும் கருணாநிதி கலந்து கொள்ளவில்லை. இம் மாநாட்டின் போது தான் தமிழர்களை அவமதிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சுவீடன் நாட்டுத் தமிழறிஞர் பீட்டர் சால்க், ஈழத்தமிழறிஞர் சிவத்தம்பி ஆகியோர் மாநாட்டில் உரையாற்ற அழைக்கப்பட்டு, இங்கு வந்த பிறகு அவர்களைக் கட்டாயப்படுத்தி வெளியேற்றிய வெட்ககரமான நிகழ்ச்சி நடைபெற்றது. உலகத் தமிழர்கள் அனைவரும் இதை வன்மையாகக் கண்டித்தனர்.

1998 ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற 6 ஆவது உலக சைவ மாநாட்டில் கலந்துகொள்ள வெளிநாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் பலர் வந்திருந்தனர்.ஆனால் தென்னாபிரிக்காவில் இருந்து வந்திருந்த வீரபத்திரன், இலங்கையைச் சேர்ந்த மனோன்மணி சண்முகதாஸ், பிரிட்டனைச் சேர்ந்த டாக்டர் சிவதாசன் தம்பதியினர் ஆகிய நால்வர் வெளியேற்றப்பட்டனர். இதற்கு எதிராக மாநாட்டுப் பிரதிநிதிகள் அறவழியில் போராடினர்.

ஆனாலும் எதுவும் நடக்கவில்லை. அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி இதைத் தடுக்க எதுவும் செய்யவில்லை.

அதற்குப் பின் 2002 ஆம் ஆண்டு ஜூலை 20, 21 ஆம் திகதிகளில் சென்னையில் உலகத் தமிழர் பேரமைப்பின் தொடக்க விழா மாநாடு நடைபெற்றபோது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா அதற்குத் தடை விதித்தார்.அரசியலுக்கு அப்பாற்பட்ட மாநாடு என்று தெரிந்தும் இந்தத் தடை விதிக்கப்பட்டது.

உயர் நீதிமன்றம தலையிட்டு அந்தத் தடையை நீக்கி மாநாட்டுக்கு அனுமதி வழங்கியது.

2004 ஆம் ஆண்டு பெங்களூரில் உலகத் தமிழர் பேரமைப்பின் மூன்றாம் ஆண்டு நிறைவு மாநாட்டின் போது மாநாட்டைத் தொடக்கி வைப்பதற்காக அழைக்கப்பட்டிருந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், சென்னை விமான நிலையத்திலேயே திருப்பி அனுப்பப்பட்டார்.

அதற்குரிய காரணம் எதுவும் அவருக்கு அதிகாரிகளால் தெரிவிக்கப்படவில்லை. தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் இந்த நாடுகளுக்குள் சுற்றுப் பயணம் செய்து வருவதற்கு விசா எதுவும் தேவையில்லை. இந்த விதியும் மீறப்பட்டது. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரான ஈழவேந்தனுக்கு உரிய விசா இருந்தும் அவர் திருப்பி அனுப்பப்பட்ட அவலம் நேர்ந்தது. அப்போதும் முதலமைச்சராக ஜெயலலிதா இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12, 13ஆம் திகதிகளில் சேலம் நகரில் உலகத் தமிழர் பேரமைப்பின் நான்காம் ஆண்டு நிறைவு மாநாடு நடைபெற்ற போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி அதற்குத் தடை விதித்தார்.

இந்தத் தடையும் உயர் நீதிமன்றத்தால் நீக்கப்பட்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது.

2009ஆம் ஆண்டு டிசம்பர் 26 , 27ஆம் திகதிகளில் தஞ்சை நகரில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரமைப்பின் ஏழாம் ஆண்டு நிறைவு மாநாட்டில் பங்கேற்பதற்காக வந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சென்னை விமான நிலையத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டார். இதுவும் முதலமைச்சர் கருணாநிதியின் ஆட்சியின்போது தான் நடைபெற்றது.

உலகத் தமிழர்கள் ஒன்றுகூடி தமது பிரச்சினைகள் குறித்து கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளும் சுதந்திரம் தமிழ் நாட்டில் இல்லை என்பதை இந்த வெளியேற்ற நிகழ்ச்சிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்நாட்டைத் தங்கள் தாயகமாகக் கருதுகின்ற வெளிநாட்டுத் தமிழர்கள் தமிழகம் வரும்போதெல்லாம் இப்படி விரட்டியடிக்கப்படுவது ஒட்டுமொத்த தமிழினத்திற்கே அவமானமாகும்.

ஜெயலலிதா அல்லது கருணாநிதியின் ஆட்சிக் காலங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாடுகளில் பங்கேற்க வந்தவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தால் பிரளயம் எதுவும் நேர்ந்திருக்காது.

தமிழறிஞர்களை அவமதித்த குற்றமும் முதலமைச்சர்கள் மீது படிந்திருக்காது. வெளியேற்றப்பட்ட தமிழறிஞர்கள் ஆனாலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆனாலும் அவர்கள் அனைவரும் தமிழகத்திற்குப் புதியவர்கள் அல்லர். எத்தனையோ முறை வந்து சென்றவர்கள். ஜெயலலிதா வேண்டுமானால் அவர்களைப் பற்றி அறியாமல் இருக்கலாம். ஆனால் கருணாநிதி அவர்கள் குறித்து நன்கு அறிந்தவர்.

என்றாலும் டில்லியில் தமிழர் அவமதிப்பு போக்கினைத் தடுத்து நிறுத்தத் தமிழர்களின் உரிமையை நிலைநாட்ட இருவருமே தவறிவிட்டனர்.

இந்தியாவில் பிற மொழி பேசுகிறவர்கள் நடத்தும் உலக மாநாடுகளுக்கு வருகிறவர்கள் தாராளமாக வந்து சுதந்திரமாகப் பேசிவிட்டுப் போகிறார்கள். உலகத் தெலுங்கர் மாநாடு சில ஆண்டுகளுக்கு முன்னால் ஹைதராபாத் நகரில் நடைபெற்றபோது பிறநாடுகளில் வாழும் தெலுங்கர்கள் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வந்தபோது எவ்விதத் தடையும் விதிக்கப்படவில்லை. அவ்வாறே பெங்களூரில் நடந்த உலக கன்னட மாநாட்டிலும் பிற நாடுகளைச் சேர்ந்த கன்னடர்கள் தாராளமாகக் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

உலகப் பஞ்சாபி மாநாடு சண்டீகரில் நடைபெற்றபோது கனடாவில் வாழ்ந்து கொண்டிருந்த காலிஸ்தான் இயக்க ஆதரவாளர்கள் இந்தியா வர இந்தியத் தூதரகம் விசா தர மறுத்துவிட்டபோது பஞ்சாப் முதலமைச்சர் பிரதமரிடம் போராடி விசா வழங்கச் செய்தார். இந்திய அரசால் தடை செய்யப்பட்ட காலிஸ்தான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்குள் தாராளமாக வந்து தங்கள் மொழி மாநாட்டில் சுதந்திரமாகப் பேச முடிகிறது.

இதற்கு பஞ்சாப் முதலமைச்சரின் மொழி உணர்வும் மத்திய அரசுடன் போராடும் மன உறுதியுமே காரணமாகும்.

தமிழ் நாட்டில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்த பிறநாட்டுத் தமிழர்கள் வெளியேற்றப்பட்டதற்கு தான் பொறுப்பல்ல. மத்திய அரசே பொறுப்பு என்று சொல்லி முதலமைச்சர் தப்பித்துக்கொள்ள முடியாது.

மத்திய ஆட்சியிலும் இவரது கட்சி ஓர் அங்கம். பிரதமரிடம் இவருக்கு மதிப்பு நிறைந்த செல்வாக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனாலும் தமிழர்களுக்கு எதிரான மத்திய அரசின் நடவடிக்கைகளை இவர் தடுத்து நிறுத்த முன்வரவில்லை என்று சொன்னால் அது இவரது சம்மதத்தோடு நடைபெறுகிறது என்பதுதான் பொருள்.

முதலமைச்சர் கருணாநிதி முன்னின்று நடத்த இருக்கும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் பங்குபெற உலக நாடுகளிலிருந்து இத்தனை இத்தனை பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருக்கிறார்கள் என்ற பட்டியலை முதலமைச்சர் மிக்க பெருமிதத்துடன் வெளியிட்டிருக்கிறார்.

மற்றவர்கள் நடத்தும் உலகத் தமிழ் மாநாடுகளுக்கு வந்த பலரை வெளியேற்றியவர் இப்போது இவர் நடத்தும் மாநாட்டுக்காவது உலகத் தமிழர்களை அனுமதிக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.


இவர்களில் யாரையேனும் வெளியேற்றாமல் இருப்பார் என நம்புவோமாக.



யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி விக்னராஜாவின் குடும்பத்தினர் தொகுத்த 'சவால்கள் சாதனைகள் சாந்தி' நினைவேடு வெளியீட்டு விழாவில் உயர் நீதிமன்ற நீதியரசர் க.ஸ்ரீபவன், யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் சுடரேற்றுவதையும் திருமதி சாந்திகுமாரியின் திருவுருவப் படத்திற்கு அவரின் கணவர் இ.த.விக்னராஜா சுடரேற்றுவதையும் நினைவேட்டினை வண.கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் வெளியிட்டு வைக்க உயர் நீதிமன்ற நீதியரசர் பெற்றுக் கொள்வதையும் மேலுள்ள படங்களிலும்,

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையுரை ஆற்றுவதையும் இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் திருநீலகண்டன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் விக்னராஜாவின் புதல்வர் சஞ்சேந்திரா நன்றியுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-றம்சன்)*

# சீரற்ற காலநிலையால் ஆட்டம் பாதிப்பு; இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 243



(சிட்டாகொங்)

சச்சின் டெண்டுல்கர் சதம் அடித்தும் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 243 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் பங்களாதேஷ் அணி நேற்றைய 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 59 ஓட்டங்களை எடுத்தது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் சிட்டாகொங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களை யிழந்து 213 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் 2 ஆம் நாளான நேற்றைய ஆட்டம் போதிய வெளிச்சமின்மையால் தாமதமாக ஆரம்பமானது. இதில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 243 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 166 பந்துகளில் (11 பவுண்டரிகள்; 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 105 ஓட்டங்களை எடுத்ததுடன் டெஸ்டில் அரங்கில் தனது 44-வது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

பந்து வீச்சில் சஹாடாட் ஹுசைன், அணித் தலைவர் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு இக்பால்-ஹயில்ஸ் ஜோடி நிதானமான ஆரம்பத்தை வழங்கியது.

இந் நிலையில் 2 ஆம் நாள் மதிய போசன இடைவேளைக்குப் பின் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. எனினும் சில மணி நேரத்தில் ஆட்டம் ஆரம்பமான போது பங்களாதேஷ் அணி அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் தேநீர் இடைவேளைக்குப் பின் போதிய வெளிச்சமின்மை காரணமாக 2 ஆம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 17 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையிழந்து 59 ஓட்டங்களை எடுத்தது.

இதில் தமீம் இக்பால் 31 ஓட்டங்களையும் இம்ரூல் ஹயில்ஸ் 23 ஓட்டங்களையும் நபீஸ் 4 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்ததுடன் அஷ்ரபுல் ஓட்டம் எதனையும் ஆரம்பிக்காமலும் ரகிபுல் ஹசன் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர். இப் போட்டியின் 3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஆஸி.தொடரை முழுமையாக சுவைத்தது; பாகிஸ்தான் அணியின் தொடரும் சோகம்

(ஹோபாட்)


பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 3:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரேயொரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது. இந் நிலையில் 3-வதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 14 ஆம் திகதி ஹோபாட்டில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 519 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 301 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்



களையுமிழந்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 218 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற அவுஸ்திரேலிய அணி 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 5 விக்கெட்டுக்களையிழந்து 219 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இந் நிலையில் 438 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 206 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 231 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட்தொடரை 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இப் போட்டியில் 298 ஓட்டங்களை (முதல் இன்னிங்ஸில் 209, 2-வது இன்னிங்ஸில் 89 ஓட்டங்கள்) எடுத்து அணியின் வெற்றிக்கு உதவிய அணித் தலைவர் பொண்டிங் ஆட்டநாயகனாகத் தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை ஷேன் வோட்ஷன் வென்றார்.

# தேர்தல் வன்முறைகள் திடீர்...

ஒட்டிக்கொண்டிருந்த வேளை அங்கு வந்த இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் குறித்த பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் ஆதரவாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வன்முறைகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கையை எடுக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ள நிலையிலேயே இந்த கொலைச் சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

ஆதரவாளர்கள் இவ்வாறு கொல்லப்படுவதையடுத்து மக்கள் பெரும் பீதியுடனும் அச்சத்துடனும் காணப்படுகின்றன.

இவ்வாறான கொலைச்சம்பவங்கள் தொடர்பில்கண்காணிப்பாளர்கள்பெரும்அதிருப்திதெரிவித்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

மதுரங்குளி துப்பாக்கிபிரயோகம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான விசேட புலனாய்வுப் பிரிவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மதுரங்குளியில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகம் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கென விசேட புலனாய்வுப்பிரிவினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மதுரங்குளியில் இடம்பெற்ற துப்பாக்க பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஐவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ரன்னப்பகுதியில் பஸ் வண்டி ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் யுவதி ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தொடர்ந்தும் விசேட பொலிஸ் குழுவினர் விசாரணை நடத்தி வருவதாக தென் பிரதேசத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் பிரதி பொலிஸ்மா அதிபர் கிங்ஸ்ஸி ஏக்கநாயக்க தெரிவித்தார். (ச-5)

# வடக்குக்கிழக்கு மக்களின் வாக்குகளே அடுத்த ஜனாதிபதியை தீர்மானிக்குமாம்!

(கொழும்பு)

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் போன்று இம்முறை ஜனாதிபதியை தெரிவு செய்வதில் வடபகுதி தமிழ் மக்களின் வாக்குகள் தீர்க்கமாக அமையக் கூடும் எனவும் இதனால் வடபகுதி வாக்குகள் குறித்து முக்கிய கவனம் செலுத்துமாறும் அரச புலனாய்வுப் பிரிவு பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கிய இரகசிய அறிக்கையில் தெரிவித்து ள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க வழங்கியுள்ள இந்த அறிக்கையின் படி தென் பகுதியிலுள்ள 11மாவட்டங்களில் ஜனாதிபதிக்கு வெற்றி கிடைக்கும் என உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் வடக்கு கிழக்குத் தேர்தல் முடிபுகளின் அடிப்படையில் ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றிபெறக் கூடும் என அவர் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 7லட்சத்து 21ஆயிரத்து 359வாக்காளர்களில் 65 வீதமானோர் அதாவது 4 லட்சத்து 68 ஆயிரத்து 883பேர் வாக்களித்தால் அவற்றில் 75வீதமான வாக்குகள் அதாவது 3லட்சத்து 47ஆயிரத்து 443 வாக்குகள் ஜெனரல் பொன்சேகாவிற்கும், 60 ஆயிரத்து 223வாக்குகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் கிடைக்க வாய்ப்புள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## ஜனாதிபதி...

அற்ற விதத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரவு வழங்கபோவதாகவும் காமினி சமரநாயக்கா மேலும் கூறினார். (ச-5)

## ஜி.எஸ்.பி.பிளஸ்...

புனர்வாழ்வு மையங்களில் இயல்பு வாழ்க்கைக்குத் தயார்படுத்தப்படுகின்றனர் எனக் கூறியதுடன் இலங்கை மனிதவுரிமை விடயங்களிற் கூடியகவனஞ் செலுத்து வதாகவும் மனிதவுரிமை மீறல்கள் வெகுவாகக் குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தமிழ் ஒருங்கமைப்பின் சர்வதேச இணைப்பாளர் சேனன் இலங்கைத் தூதுவரின் சாட்சியம் ஏற்றுக் கொள்ள முடியாததும் உண்மைக்குப் புறம்பானதுமென மறுத்துத் தன் விவாதத்தை விசாரணைக்குழுவில் முன்வைத்தார்.

இலங்கைத் தூதுவர் முன்வைத்த எல்லா விதமான விவாதங்களுக்கும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. கடந்த 2008லிருந்து ஒரேயொரு குழந்தை மட்டுமே போராளியாக்கப்பட்டுள்ளார் எனத் தூதுவர் தெரிவித்தார்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த தமிழ் ஒருங்கமைப்பு, தொடர்ந்தும் குழந்தைகள் பாதிக்கப்படுவதாகவும் எட்டு வயதுடைய குழந்தையுட்பட பல சிறார்கள் இலங்கையரசினால் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுச் சித்திரவதையை அனுபவிப்பதாகவும் எம்மிடம் அதற்கான ஆதாரமுண்டு எனவும் வாதிட்டது.

இதைவிட ஊடகவியலாளர்கள் கடத்தப்படுதல், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் எனப் பல விடயங்கள் தொடர்பில் விவாதம் நடைபெற்றது.

இறுதியில் இலங்கை அரசாங்கம் மனிதவுரிமை மீறல்களை நிறுத்தி நிலைமையைச் சீரமைக்காத பட்சத்தில் ஆறு மாதத்துக்குள் ஜி.எஸ்.பி.பிளஸ். சலுகை இரத்துச் செய்யப்படுமென ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் அறிவித்தனர். (ச-5)

# பொன்சேகாவின் வாக்குறுதிகள்...

அனுபவங்களை ஏற்படுத்தியிருந்தது.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலானது. போர் நிறைவடைந்த பல மாதங்களின்பின் நடைபெறும் போதும் இலங்கை அரசு மீது அதிகளவிலான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்தப் பட்டுள்ளன.

நடைபெறப்போகும் தேர்தல் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் மாற்றத்தை கொண்டுவருமா என கேட்டபோது இலங்கையுடனான உறவுகள் ஏற்கனவே ஒரு அனுகூலமான நிலைக்கு திரும்பியுள்ளதாக அமெரிக்க அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு மாதங்களாக நாம் பல முன்னேற்றமான நடவடிக்கைகளை காண்கின்றோம். தேர்தல் நடைபெறுவதால் கூட அது இருக்கலாம். எனினும் அவை பொதுமக்களுக்கு நன்மையானதே என தனது பெயரை குறிப்பிட விரும்பாத அந்த அதிகாரி எம்மிடம் தெரிவித்தார்.

பல மாதங்களாக முகாம்களில் அடைத்து வைக்கப்பட்ட இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் விடுவிக்கப்பட்டது அனைத்துலக மட்டத்தில் வரவேற்பை பெற்றுள்ளது.

இலங்கை தொடர்பில் உன்னிப்பாக அவதானங்களை மேற்கொண்டுவரும் சில தரப்பினர் மேற்குலகத்துடன் நிற்கின்றனர். குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை குறிப்பிடலாம். அவர்கள் அரசிற்கு மிகப் பெரும் அழுத்தங்களை கொடுத்துவரு கின்றனர். எனினும் அவர்களிடம் பொன் சேகா தொடர்பில் இரு வேறுபட்ட பார்வைகள் உண்டு.

பொன்சேகா அமெரிக்காவின் கிறீன்காட் விசாவை கொண்டுள்ளவர். போர் குற்றம் தொடர்பான அமெரிக்க அரசின் விசாரணை களில் இருந்து கடந்த நவம்பர் மாதம் தப்பி இருந்தார்.

ஜனாதிபதியாக பொன்சேகா வருவதை அமெரிக்கா தனது முதல் தெரிவாக கொண்டிருக்கவில்லை எனினும் அவர் வெற்றி பெற்றால் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் நல்ல மாற்றம் ஏற்படுவதற்கான வழி திறக்கப்படும் என நெப்ரஸ்கா வெஸ்லியன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இலங்கையின் வெளிவிவகாரங்கள் தொடர்பான நிபுணர் றொபேட் ஓபோஸ்ட் தெரிவித்துள்ளார்.

ஆனால் பொருளாதார நலன்களை பின் தள்ளி, முன்னர் பிரித்தானியா மேற்கொண்ட காலனித்துவ ஆளுமை மேற்குலகத்தை ஆட்கொண்டுள்ளதா என தான் சந்தேகப் படுவதாக ஜெர்கெடவுடன் பல்கலைக்கழகத்தின் துணை பேராசிரியரும் இலங்கையில் நடைபெற்ற பிரிவினைவாத போர் என்ற நூலின் ஆசிரியருமான அசோக பண்டாரகே தெரிவித்துள்ளார்.

மேற்குலகத்துடன் உள்ள உறவை முறித்து கொள்வதற்கு சிங்கள சமூகம் விரும்பப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் தமிழ் மக்கள் மீது போரை தொடுத்தவர்கள் என்பதால் தம்மிடம் தெரிவு எதுவும் இல்லையென அமெரிக்காவின் இலங்கைப் பொருட்களை புறக்கணிக்கும் போராட்டத்தை மேற்கொண்டுவரும் அமைப்பைச் சேர்ந்த தஷா மனோரஞ்சன் தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னர் அவர்கள் தமிழ்மக்கள் மீது தயவுகாண்பிக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவை விட பொன்சேகாவை புலம்பெயர் தமிழ் சமூகம் அதிகம் விரும்புகிறது. அவர்கள் பொன்சேகாவிற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க தீர்மானித்துள்ளனர்.

மகிந்த தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதே புலம் பெயர் தமிழ் சமூகத்தின் ஆவல் என கனடா தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பேச்சாளர் டேவிட் பூபாலப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சூழ் நிலைகள் மாறும் போது புதிய நம்பிக்கைகள் உதயமாகலாம். அது இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தலாம்என அவர்மேலும்தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஜனாதிபதித் தேர்தலில் அனை...

இது தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு,

கடந்த வாரத்தில் இலங்கை ஜனாதிபதி தேர்தல் தொடர்பான இரு அறிக்கைகளை அமெரிக்கத் தூதரகம் விடுத்திருந்தது.

அவை பெரும்பாலும் சுதந்திரமானதும் நீதியானதும் வன்முறைகள் அற்ற தேர்தல் ஒன்றினை வலியுறுத்தும் முகமாகவே அமைந்திருந்தன.

இவ் ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்கா நடுநிலையாகவே உள்ளது.எந்த வேட்பாளர் வென்றாலும் கவலையில்லை.அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்தும்.

இத் தேர்தல் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒன்றாகும். அதாவது முதன்முறையாக நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் மக்கள் தமது ஜனநாயக உரிமை மூலம் இந்நாட்டை தலைமை தாங்குவதற்கான தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்கவுள்ளனர்.

எந்தவொரு வேட்பாளரையும் அமெரிக்கா ஆதரிக்கவில்லை. இறுதி முடிபுகளை விட ஜனநாயக ரீதியான முறையில் தேர்தல் இடம்பெறவேண்டும் என்பதே நோக்கம். எமது அறிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் நடுநிலையாகவே அமைந்துள்ளன.

தேர்தல் தினத்துக்கான கடைசி வாரத்தை எட்டியுள்ள சமயம் எதிர்வரும் 26ஆம் திகதி இலங்கையர்கள் அனைவரும் எவ்வித இடையூறும் இன்றி வன்முறைகள் இன்றி சுதந்திரமாக வாக்களித்து ஜனநாயகத்தை நிலைநாட்டி ஒன்றிணைந்த இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும் என அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ச-5)

# ஜனாதிபதித் தேர்தலின்...

செய்து அந்நாட்டின் வெளியுறவுச் செயலாளரைச் சந்தித்துப் பேசினோம்.

அதாவது, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துள்ள முடிபு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் இந்திய வெளியுறவு அமைச்சர் உட்பட்ட உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினோம்.

நாம் கூறிய விடயங்களை ஆர்வமாகவும் அக்கறையுடனும் செவிமடுத்த இந்தியத் தரப்பினர் அவற்றை உள்வாங்கிக்கொண்டனர். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்து செயற்பட தயார் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை மோசமான காலநிலை காரணமாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரை சந்திக்க முடியவில்லை.

நாங்கள் சென்ற விமானம் மோசமான காலநிலை காரணமாக மீண்டும் சென்னை திரும்பி விட்டது. அதற்கிடையில் இந்திய வெளியுறவு அமைச்சர் வெளிநாடு சென்று விட்டார்.

எனவே மீண்டும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்து உயர்மட்டத் தலைவர்களை சந்திக்கவுள்ளோம். அதன்போது பல விடயங்கள் குறித்து கலந்துரையாட எதிர்பார்க்கிறோம் என சேனாதிராசா தெரிவித்தார். (ச-5)

## வன்னியில் மிதி...

உள்ள புளியங்குளம் பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாமிற்கு அருகில் இந்த சம்பவம் நடை பெற்றதாகவும் காயமடைந்தவர் ஆபத்தாக கட்டத்தை தாண்டி விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை சிவானந்தன்

ஓய்வு பெற்ற தொழில்நுட்பவியலாளர், (RDA யாழ்ப்பாணம்)
வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர் (RDD)



சாவகச்சேரி, விநாசித்தம்பி விதி, கோயில் குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவானந்தன் 17.01.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னத்துரை (P.L.O) மீனாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும், மாணிக்கம் முத்தாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், கஜேந்திரன், Dr. சசிகரன் (யாழ். போதனா வைத்தியசாலை), ஸ்ரீரங்கன் (பொறியியலாளர்-லண்டன்), Dr.சிவதர்சனா (யாழ். போதனா வைத்தியசாலை), சேந்தன் (பொறியியல் மாணவன்-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுதாயினி, Dr.ஜனாளனி (யாழ். போதனா வைத்தியசாலை), தர்மினி (பொறியியலாளர்-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆராதனா, தருண் ஆகியோரின் பாசமிகு பேரனும், திருஞானசோதி (கனடா), காலஞ்சென்ற சிவராசா (ஓய்வு பெற்ற இ.போ.ச. பரிசோதகர்), சிவகுமாரி, சிவதேவி (ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), Dr.சிவபாலன் (சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன் கிழமை (20.01.2010) மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாசித்தம்பி வீதி,
கோயில் குடியிருப்பு,
சாவகச்சேரி.

தகவல்
Dr.சசிகரன்
(மகன்)

(372)




MIS
(O/L)
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கானது
100% Practical

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma in MS-Office
Diploma in Desktop Publishing
Diploma in Hardware Technology
Diploma in Web Development
Diploma in Java Programming
Diploma in VB.Net Programming
Certificate in Visual Basic
Certificate in Web Designing
Certificate in Digital Video Editing
Certificate in 2D Animation

#74, Sabapathy Lane,Thalaiyaaly, Jaffna. TPNO:021 321 6083

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.